Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு2031 கார்த்திகை14 புதன்கிழமை(29-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:03

# அமெ., இந்தியா மற்றும் மேற்கு நாடுகள் பிரபாவின் மாவீரர்தின உரைக்கு வரவேற்பு

## சிங்களக் கடும்போக்காளர்களோ சீற்றம்

கொழும்பு,நவம்பர்29

**மாவீரர் தினத்தையொட்டி நேற்றுமுன்தினம் தாம் நிகழ்த்திய உரையில் சமாதானத்துக்கான அழைப்பை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்திருப்பதை இந்தியா, அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் வரவேற்றுள்ளன. அதேபோன்று இலங்கை அரச மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலரும் வரவேற்றுள்ளனர். ஆனால் சிங்களக் கடும்போக்காளர்களோ அந்த உரை தமிழீழத்துக்கான அறைகூவல் என்று வர்ணித்து கடும் சீற்றம் வெளியிட்டிருக்கின்றனர்.**

கொழும்பு வந்துள்ள தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் (பிரதி அமைச்சர்) கார்ல் எஸ்.இன்ரபேர்த் நேற்றுமாலை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போது பிரபாவின் பேச்சுக் குறித்து வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:-

பிரபாகரனின் செய்தியை நான் முழுமையாக வாசிக்கவில்லை. அதனை

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போக்குவரத்துக் குறித்து ஒத்திவைப்புப் பிரேரணை!

### 5ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதம்

கொழும்பு,நவ.29

வடக்கே உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புதல் -

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான பொதுமக்கள் போக்குவரத்து -

ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரி நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணை எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் படும்.

இது தொடர்பாக தான் சமர்ப்பித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பகைமை உணர்வுகளைக் கைவிட புலிகளைக் கோருகிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,நவ.29

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தியைக் கவனமாகச் செவிமடுத்தோம். சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது மற்றும் மக்களின் வாழ்க்கைக்கு உகந்த சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவது என்பன தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் ஆர்வத்துக்குரியவை. எனினும் இந்த உரையில் மக்கள் நலன் மற்றும் சர்வதேச உறவுகள் போன்ற முக்கிய விடயங்களில் காணப்படும் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களும் யுத்த முனைப்புக்களும் கவலைக்குரியவையாகும்.

- வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரி

(11ஆம் பக்கம் பார்க்க)



## ஹொரவப் பொத்தானையில் கிளைமோருக்கு 8 பேர் பலி!

கொழும்பு,நவ.29

பதவியா ஸ்ரீபுரத்திலிருந்து அனுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பயணிகள் பஸ் ஒன்று நேற்றுக் காலை 6.15 மணியளவில் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானதில் அதில் பயணம்செய்த பொது மக்கள் எண்மர் உயிரிழந்தனர்; நாற்பது பேர் காயமடைந்தனர்.

இந்த பஸ் ஹொரவப்பொத்தானை தம்மன்ன பகுதியில் சென்று கொண்டிருந்த சமயம் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானது என்றும் -

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்ததாகக் கருதப்படும் கிளைமோரே வெடித்ததாக நம்பப்படுகிறது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த 8 பொதுமக்களில் மூவர் பெண்கள். அவர்களில் ஒருவர் பாடசாலை மாணவி.

காயமடைந்த பயணிகள் உடனடியாக அனுராதபுரம் ஆஸ்பத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளியும் சனியும் மோதல் தவிர்ப்பு!

### போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்காக

கொழும்பு,நவ.29

நாடு முழுவதிலுமுள்ள குழந்தைகளுக்கு போலியோத் தடுப்புச் சொட்டு மருந்து இவ்வருடத்தில் இரண்டாவது தடவையாக எதிர்வரும் 2 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதை முன்னிட்டு எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் (வெள்ளி, சனிக்கிழமைகளில்) விடுதலைப்புலிகளும் அரச படையினரும் மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடிக்க இணங்கியுள்ளனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்பயணிகளின் பெயர்கள் பதியும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.29

பலாலி - இரத்மலானை விமான சேவையில் பயணம் செய்வோருக்கான பதிவு வேலைகள் மீண்டும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்று வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை யாழ்.அலுவலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி வரையான விமான சேவைகளில் பயணம் செய்வோருக்கான பெயர்ப்பட்டியல் கடந்த வாரமே தயாரிக்கப்பட்டு விட்டதால் தொடர்ந்து பயணிகளின் பெயர்களைப் பதியும் வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. (உ-3)

## கச்சதீவு அருகே கடற்படையின் சூட்டில் தமிழக மீனவர் மரணம்

யாழ்ப்பாணம்,நவ.29

கச்சதீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த முனியசாமி என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

ஒரே வள்ளத்தில் இருந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த நான்கு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும்-

வள்ளத்தினுள் பதுங்கி தன்னைப் பாதுகாக்க முயன்ற முனியசாமி உயிரிழந்தார் என்றும் -

ஏனைய மூன்று மீனவர்களும் காயங்கள் ஏதுமின்றித் தப்பினர் எனவும் - இந்திய வானொலி தெரிவித்தது.

இதற்கிடையில் - இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் -

முனியசாமியின் கொலை குறித்து இலங்கையின் உயர் அதிகாரிகளுடன உடனடியாகப் பேசவேண்டும் எனவும் - தமிழக முதலமைச்சர் கருணாநிதி தாம் பிரதமர் வாஜ்பாய்க்கு நேற்று எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார். (உ-8-164)

### காலநிலை சீரின்மையால்

## 'லங்கா முடித்த' கப்பல் மூலமான பயணிகள் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,நவ.29

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் 'லங்கா முடித்த' கப்பல் மூலம் இன்று நடத்தப்படவிருந்த பயணிகள் சேவை மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

காலநிலை மற்றும் கடற்கொந்தளிப்புக் காரணமாக இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இன்று முதல் அடுத்தடுத்து மூன்று தடவைகள் இந்தக் கப்பல் மூலம் பயணிகள் சேவை மேற்கொள்ள யாழ்.செயலகம் ஏற்பாடு செய்திருந்தது.

இதற்கு வசதியாக இன்று ஆரம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடகிழக்கே சூறாவளி

கொழும்பு,நவ.29

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருக்கும் சூறாவளி நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு வடகிழக்குத் திசையில் நானூறு கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்ததாக காலநிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்தது.

இந்தச் சூறாவளி தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளை நோக்கி மணிக்கு 20கிலோ மீற்றர் வேகத்தில் நகர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## அரியாலையில் 13 படையினர் காயம்

கொழும்பு,நவ.29

அரியாலைப் பகுதியில் அமைந்துள்ள படையினரின் நிலைகள் மீது நேற்றுமுன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் 13படையினர் காயமடைந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

## பதவியாவில் 2 படையினர் புலிகளின் தாக்குதலில் பலி

கொழும்பு,நவ.29

வெலிஓயாவில் பதவியா நீர்த்தேக்க அணையில் துரிசுக் கதவுகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த படையினரின் முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொண்ட தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர்; அந்த முகாம் பொறுப்பதிகாரியான அதிகாரி உட்பட இருவர் காயமடைந்தனர்.

விசேட ஊடகத் தகவல் நிலையம் இத்தகவலை வெளியிட்டது.

இத் தாக்குதலை படையினர் எதிர்த் தாக்குதல் மூலம் முறியடித்தனர் என்றும் -

விடுதலைப்புலிகளின் சடலம் ஒன்றையும் பல ஆயுதங்களையும் படையினர் அப்பகுதியில் இருந்து மீட்டுள்ளனர் என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-3)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(28-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ 10,02,843**

Digitized by Noolaham Foundation.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்

# கட்டத்தவறிய தவணைப்பணம் செலுத்தக் காலஎல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டத்தில் இணைந்து, தொடர்ச்சியாக 5 தவணைகளுக்கான பணத்தை கட்டத் தவறி உறுப்புரிமையை இழந்த பயனாளிகளின் நன்மை கருதி தவணைப்பணத்தை கட்டுவதற்கான காலஎல்லை அடுத்த மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பணத்தை கட்டத் தவறிய விவசாயிகள் இந்தக் காலப்பகுதிக்குள் தமது நிலுவைகளை தாமதக் கட்டணத்துடன் நல்லூர் கமநல கேந்திர நிலையத்தில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட காரியாலயத்தில் செலுத்தலாம் என்று கமத்தொழில் காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளர் க.சுந்தரேசன் அறிவித்துள்ளார்.

பவளவிழாக் (2000.12.03) காணும்

கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா ~ பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் அவர்களை

## வாழ்த்துகிறோம்

மூர்த்தி தல தீர்த்த முதன்மை மிக்குடைய நகுலேஸ்வரத்தின் நற்குரு முதல்வர் மூர்த்தியின் பெயரே தன் பெயராகக் கீர்த்தி பெற்றுயர்ந்த தெய்வத்திருவுரு செந்தண்மை பூண்டு நற் சிவப்பணி செய்யும் அந்தணர் திலகம், அனுபூதிச் செல்வர் பவளவிழாக்கண்டு பல்லாண்டு வாழ பணிந்து போற்றி வணங்குகின்றோம்.

ஒல்லுடை ஞானவயிரவர்
இளவாலை. (80995) ஆலய பரிபாலன சபையினர்.

## மூன்று இளைஞர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

உடுவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்கள் விசாரணைகளின் பின்னர் கிராம சேவையாளர் முன்னிலையில் கடந்த ஞாயிறன்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட பண்டாரிகுளம் வீதி நல்லூரைச்சேர்ந்த திருச்செல்வம் ஜதுர்சன்(வயது 17) என்ற மாணவனும்-

கடந்த 19ஆம் திகதி வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்ட பாடசாலை வீதி, நீராவியடியைச் சேர்ந்த ராசையா சிவகுமாரன் (வயது33) என்பவரும்-

கடந்த 20ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி ஈஸ்வரன்(வயது49) என்ற குடும்பஸ்தருமே விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் மூவரையும் இராணுவத்தினர் கிராமசேவையாளர்களின் முன்னிலையில் கடந்த 26ஆம் திகதி விடுதலை செய்துள்ளதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-5-6-10)

## ST. PATRICK'S COLLEGE, JAFFNA.

புதிய அனுமதி - 2001

இடம்பெயர்வு காரணமாக, புரட்டாதி மாதம் நடைபெற்ற அனுமதிப் பரீட்சைக்கு தோற்றமுடியாதிருந்தவர்களுக்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 07-12-2000 வியாழக்கிழமை நடத்தப்படும்.

காலை 9.00 மணிக்குப் பரீட்சை ஆரம்பமாகும்.

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் சமர்ப்பிப்பதற்கான இறுதித்தினம் 04-12-2000 ஆகும்.

(C/14020) - அதிபர்.

## முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.தபாலகத்துக்கு ஆயிரம் ரூபா, ஐநூறு ரூபா பெறுமதியுடைய முத்திரைகளும் ஏனைய முத்திரைகளும் நேற்று வந்து சேர்ந்துள்ளன எனப் பிரதம தபால் அதிபர் சி.மார்க்கண்டன் தெரிவித்தார்.

முத்திரையிடப்பட்ட கடித உறை, வான்கடிதம் ஆகியனவும் வந்து சேர்ந்துள்ளன. (உ-3)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்-வரையுள்ளது

## வாகன சாரதிக்கான பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவம், சம்பள அளவுத் திட்டம், தகைமைகள், ஏனைய விவரங்கள் என்பன சங்கத்தில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

*விண்ணப்ப முடிவு திகதி* – **15.12.2000**

- பொது முகாமையாளர்.

*127, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/14022)

## சாரணிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.29

சிரேஷ்ட சாரணியர், வழிகாட்டுநர் ஆகியோருக்கான அவசர கலந்துரையாடல் முன்அறிவித்தபடி இன்று பிற்பகல் 2.30மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30 - 10 - 1923



மறைவு
11 - 12 - 1999

### அமரர் நாகேசு தம்பிமுத்து

(ஸ்தாபகர் - ரவர் கோப்பி & கூல்பார்.)

*திதி: 29.11.2000*

நாள்கள் உருண்டன ஐயா!
காலம் தான் கரையும் போதும்
கவலைகள் மட்டும் ஓயுதில்லை ஐயா!
நினைத்து நினைத்து ஓராண்டு
எங்கள் இதயமெல்லாம் நீங்கள்தான்
சரணம்!! சரணம்!! சாந்தி, சாந்தி.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்.

*15,யாழ்பாடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (80992)

**லஷ்சுமி சினிமா**
இணுவில்
மாதவன், ஷாலினி
நடித்த
**அலைபாயுதே**
(ரீலஸ்)
காட்சிகள்
10.30, 2.30 (ப.நேரம்)
(81007)

**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜூன், ரோஜா,
ரம்பா, ஆனந்தராஜ்
நடித்த
**அடிமைச்சங்கிலி**
(ரீலஸ்) காட்சிகள் - 11.00, 2.30 (பி.நே.)
(80727)

**ராஜா** யாழ்ப்பாணம்
விஜய், சிம்ரன்,
மணிவண்ணன்
மற்றும் பலரின் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
[illegible]
காட்சிகள்:10.30, 2.00 (பி.நே.)
(C/13648)

## யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியத்தில் "வித்தகம்" சஞ்சிகை வெளியீடு

இடம் : யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவக மண்டபம்
காலம் : இன்று (29.11.2000) புதன்கிழமை காலை 10.00 மணி
தலைவர் : **வே.சிவாகரன்** தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும்.
பிரதம விருந்தினர் : **கௌரவ கா.வே.குகேந்திரன்**
(யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)
சிறப்பு விருந்தினர் : **திரு.த.இராஜரட்ணம்** (நிறுவக இயக்குநர்)

**ராகம்ஸ்** இசைக்குழுவினரின் இன்னிசை கானங்களுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

### நிகழ்ச்சிநிரல்

இறைவணக்கம்:
**செல்வி லி.அபிராமி**

வரவேற்புரை:
**திரு.ம.பிரபாகரன்**

தலைமையுரை:
**திரு.வே.சிவாகரன்**
(தலைவர், மாணவர் ஒன்றியம் 1999/2000)
**திரு.க.பாலமுருகன்**
(தலைவர், மாணவர் ஒன்றியம் 2000/2001)

பிரதமவிருந்தினர் உரை:
**கௌரவ கா.வே.குகேந்திரன்**
(யாழ்.பா.ம.உ.)

சிறப்பு விருந்தினர் உரை:
**திரு.த.இராஜரட்ணம்** (இயக்குநர்)

வெளியீட்டுரை:
**திரு.இ.சுகுமார்**

முதற் பிரதி பெறுபவர்:
**திரு.வி.அருளானந்தம்**
(N.S.B. முகாமையாளர், சுன்னாகம்)

ஆய்வுரை:
**திருமதி நி.தர்மசீலன்**
(தலைவர், முகாமைத்துவக் கற்கைகள் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

### *சிறப்புப் பிரதி பெறுபவர்கள்*

01. **திரு.கஜெயரட்ணம்**
(வடக்கு - கிழக்கு மாகாண தொழில்நுட்பக் கல்லூரிகளின் முன்னாள் பணிப்பாளர்.)
02. **திரு.மா.சின்னத்தம்பி**
(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
03. **திரு.செ.மனோகரன்**
(கணக்காளர், நல்லூர் பிரதேச செயலகம், உயர் தொழில்நுட்ப நிறுவன வருகை விரிவுரையாளர்.)
04. **திரு.இ.விஜயகுமார்**
(முகாமைத்துவ விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம், வருகை விரிவுரையாளர், உயர்தொழில்நுட்ப நிறுவகம்.)
05. **திரு.V.வேல்நம்பி**
(விரிவுரையாளர், முகாமைத்துவக் கற்கைகள், வணிக பீடம்)
06. **திரு.S.வரதராஜன்** (பொருளியல் விரிவுரையாளர்.)
07. **இயக்குநர்** (**IBMS** நிறுவனம்)
08. **திரு.பா.ஜெயக்குமார்**
(பகுதிநேர விரிவுரையாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், திறந்த பல்கலைக்கழகம், **IIS**)
09. **திரு.P.சிவபாஸ்கரன்** (சாரங்கா நகைமாடம்)
10. **திரு.M.கஜன்** (சாருஜன் பான்சி, ஸ்ரான்லி வீதி.)
11. **திரு.R.சுரேஸ்** (கரன் ரெக்ஸ்ரைல், திருநெல்வேலி)
12. **திரு.A.ஏகாம்பரம்**
(ஏகாம்பரம் புடைவை மாளிகை, பெரியகடை, யாழ்ப்பாணம்.)
13. **திரு.த.சந்திரன்** (உரிமையாளர் - ராகம்ஸ் இசைக்குழு.)
14. **திரு.மா.முருகநாயகராசா**
(**Luxy Bus** உரிமையாளர், கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்கு)
15. **திரு.மு.சுந்தரலிங்கம்**
(சதாபொன்ஸ் கல்வி நிலையம், தொலைத் தொடர்பு சேவை, றோணியோ மற்றும் போட்டோப் பிரதி சேவை)

நன்றியுரை: **திரு.J.தமிழழகன்**
(செயலாளர்.)

இச் சஞ்சிகை வெளியீட்டில் அனைத்து மாணவர்கள், மாணவ நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- 2001 ஆம் கல்வி ஆண்டிற்கு விண்ணப்பித்த மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*78, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*
***- மாணவர் ஒன்றியம்.***

*விளம்பர அன்பளிப்பு:-*
"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
**Institute of Informatics Studies (IIS)**
(பிரித்தானிய IMIS நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)
தலைமை அலுவலகம்: IIS, 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P 021-2831 E-mail : iis@sltnet.lk
கிளை நிறுவனங்கள்: IIS, நெல்லியடி, கரவெட்டி. IIS, பிரதான வீதி, சங்கானை.

**வெயலாஸ்** திருமண வைபவங்களுக்கான வாடகைப் பொருள்கள் கொடுக்கும் இடம்.
4ஆம் குறுக்குச் சந்தி, 195, பிரதான வீதி, யாழ்ப்பாணம். **T.P. No. 2110.** (80901)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முழுப் பொறுப்பும் இனி அரசிடமே

போர் நெருக்கடியைப் படிப்படியாகத் தளர்த்தி, போர் ஓய்ந்த சமாதானச் சூழ்நிலையிலேயே, நல்லெண்ணப் புறநிலையிலேயே, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்கள் நடைபெற வேண்டும்—

இதனையே தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள் என்று தலைவர் வே பிரபாகரன் தமது மாவீரர் நாள் உரையில் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ் மக்கள் மட்டுமன்றி, கொழும்பு அரசு மட்டுமன்றி அனைத்துலக நாடுகளும், சர்வதேச அரசியல் அவதானிகளும் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரையை ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தனர்.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வன்னிக்குச் சென்று பேச்சு நடத்திய பின்னர், சமாதானப் பேச்சு விடயத்தில் புதிய திருப்பம் ஒன்று உருவாகியது.

எனினும் சமாதானப்பேச்சுக்கு விடுதலைப் புலிகள் நிபந்தனை விதித்திருப்பதாக ஒரு குழப்ப நிலை தோற்றுவிக்கப்பட்டிருந்தது. தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை என்று சொல்ஹெய்ம் கூறியிருந்த போதிலும், அதனை மறுக்கும் வகையில் தகவல்கள் புனையப்பட்டன; பிரசாரமும் வேகமாகச் செய்யப்பட்டது ஆனால் பிரபாவின் உரை அதனைச் சாய்த்து விட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ணப் புறநிலையையும் இயல்பு நிலையையும் உருவாக்க வேண்டிய தன் அவசியத்தையே நாம் வலியுறுத்தி வருகிறோம்— என்று அவர் விவரித்திருக்கிறார்.

அது மட்டுமன்றி—

போர் நெருக்கடி தளர்ந்து இயல்பு நிலை தோன்றுவதற்கு நம்பிக்கையை வளர்க்கும் நல்லெண்ண நடவடிக்கைகள் இரு தரப்புகளில் இருந்தும் முன்னெடுக்கப்பட வேண்டுமென நோர்வே அரசு யோசனைகளைத் தெரிவித்துள்ளது. இதனை நாம் ஆர்வமாகப் பரிசிலனை செய்து வருகிறோம்—

எமது மக்கள் அனுபவிக்கும் துன்பச் சுமை குறைந்து, பரஸ்பர நல்லெண்ணம் நிலவும் சமாதானச் சூழ்நிலை தோன்றுவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். அதற்கான முன் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்ல முடிவுகளை எடுப்போம்— என்று தலைவர் பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்.

இனிமேலும் அரசாங்கமோ அல்லது சமாதானத்தை விரும்பாது, போரை விரும்பும் சக்திகளோ விடுதலைப் புலிகளுக்குச் சமாதானத் தீர்வில் விருப்பமில்லை என்று புனைந்துரைக்க முடியாது; சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் முடியாது.

சமாதானத்தை விரும்பும் எல்லோருக்கும் தலைவர் பிரபாகரனின் மாவீரர் உரை நம்பிக்கையைத் தருவதாக அமைந்துள்ளது. சமாதான முயற்சிகளுக்கான முன்னோடி நடவடிக்கைகளைத் தயக்கமின்றி முன்னெடுக்க வேண்டிய முழுப் பொறுப்பும் இனி அரசிடமே உண்டு. வழமை போலச் சாட்டுக்களையும், விதண்டாவாதங்களையும் அள்ளி வீசாமல் அமைதியைத் தோற்றுவிக்க ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும். செய்யுமா அரசு?

# பேச்சு நடத்த வருமாறு ஜே.வி.பிக்கு மீண்டும் நோர்வே தூதரகம் அழைப்பு

## ஆனால் அதனை நிராகரிக்கின்றது அக்கட்சி

கொழும்பு, நவ. 29

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக நோர்வே மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து பேசுவதற்கு. கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் ஜே. வி. பிக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட் பேர்க் இந்தப் பேச்சுக்கான உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்துள்ளார்.

நோர்வே தூதரகம் விடுத்த இந்த அழைப்பை ஜே வி.பி. முற்றாக நிராகரித்ததுடன், தமது நிலைப்பாட்டை ஏற்கனவே நோர்வேக்குத் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டதாகவும் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி. பிரதிநிதிகளை ஏற்கனவே ஒரு தடவை ஜோர்ன் வெஸ்ட் பேர்க் தனது அலுவலகத்துக்கு அழைத்து நோர்வேயின் சமாதான முயற்சிகள் குறித்துப் பேச்சு நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம். நவ. 29

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் சிவலிங்கப் புளியடிச் சந்தியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த கந்தசாமி பகீரதன் (வயது 29) என்பவரே முகத்தில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6-5)

## விந்துனுவெவத் தடுப்பு முகாம்

# படுகொலைச் சந்தேக நபர்கள் தொடர்ந்து விளக்கமறியலில்

கொழும்பு, நவ. 29

பண்டாரவளை விந்துனுவெவத் தடுப்பு முகாமில் தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள பொலீஸ், இராணுவத்தினரான 14 பேரையும் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு கோட்டை மேலதிக நீதிவான் ஏ. ஏ. ஆர். ஹெலியாந்துடுவ உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இரு பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள், ஆறு சப் இன்ஸ்பெக்டர்கள், நான்கு சார்ஜன்ட்கள், ஒரு றிசேர்வ் சப். இன்ஸ்பெக்டர், இரு இராணுவ கப்டன்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஒருவரான இராணுவக் கப்டன் இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றார்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட 14 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான் விசாரணையைத் துரிதப்படுத்தும்படி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

(இ-3-8)

# பகுதி நேர விரிவுரையாளர் விண்ணப்பம் கோரப்படுகின்றது

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் 2001 ஆம் கல்வி ஆண்டுக்கான பகுதி நேர விரிவுரையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முகாமைக் கணக்கியல், உயர் கணக்கியல், வரி, கணக்காய்வு, முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், வியாபாரச்சட்டம், தொடர்பாடல் ஆங்கிலம், தமிழ்த் தட்டெழுத்து, ஆங்கிலத் தட்டெழுத்து. நிதி முகாமைத்துவம், ஆங்கில செய்முறை விமர்சனம், ஆங்கிலத்தின் பயன்பாடு, ஆங்கில மொழிப் பகுப்பாய்வு, ஆங்கில இலக்கணம், ஆங்கில பேச்சுமொழி ஆகிய பாடங்களைக் கற்பிப்பதில் அனுபவமும் தகுதியும் உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் ரி. ராஜரட்ணம் தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம்திகதி எனவும் விண்ணப்பப்படிவங்களை உயர் தொழில் நுட்ப நிறுவன அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை —

இந்த வருடம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் பகுதிநேர விரிவுரையாளர்களாக 100 பேர் வரை நியமிக்கப்பட்டிருந்ததாகவும் இவர்களில் பெரும்பாலானவர்கள் நிரந்தர நியமனம் செய்யப்பட்டுள்ளதால் அடுத்த வருடம் ஏறக்குறைய 50 பகுதிநேர விரிவுரையாளர்களே நியமிக்கப்படலாம் எனவும் உயர் தொழில் நுட்ப நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-6)

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, நவ. 29

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அமரர் அ. தம்பிராசாவின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன் கிழமை மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டுமைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:

அளவெட்டி யுத் வி. கழகம் எதிர் சுழிபுரம் விக்டோறியன்ஸ் வி. கழகம்.

(ம-86)

## நாளை

கார்த்திகை 15

வியாழக்கிழமை

திதி: சதுர்த்தி

முற்பகல் 11-23 வரை

நட்சத்திரம்: உத்தராடம்

பின் இரவு 2.50 வரை.

சுபநேரம்: 07.44 - 9.14

ராகுகாலம்: 1 44 - 3.14

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயனாக்கு

பேசியதற்காக நான் பலமுறை வருத்தப்பட்டிருக்கின்றேன். ஆனால் ஒருமுறை கூட மௌனமாயிருந்ததற்காக வருத்தப்படவில்லை.

- சைரஸ் -

## மாணவருக்கு

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கான அனுமதி அட்டைகள் இன்றுமுதல் வழங்கப்படுமெனவும் மாணவர்கள் தமது அடையாள அட்டையுடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் திருமதி ம. குமாரகுலசிங்கம் அறிவித்துள்ளார்.

(உ-117)

## நிவாரணத்துக்கு

# குழந்தைகள் இல்லாதோருக்கும் லக்டோஜன் பால்மா!

அரியாலை, நவ. 29

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள் விநியோகத்தில் இம்முறை குழந்தைகளுக்கான "லக்டோஜன்" பால்மா பைக்கட் குழந்தைகள் இல்லாத குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் அந்தப் பால்மா பைக்கற் 120 ரூபா விலையிலேயே இடம்பெயர்ந்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த பால்மா பைக்கட் குடாநாட்டில் உள்ள அநேகமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்பட்டு வருவதாக மக்கள் பலரும் முறைப்பாடு செய்கின்றனர்.

இந்த பால்மா பைக்கட் விநியோகம் தொடர்பாக யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சீ. வி. கே சிவஞானத்திடம் கேட்டபோது—

லக்டோஜன் பால்மா பைக்கட் இம்முறை நிவாரண விநியோகத்துக்கென யாழ். செயலக புனர்வாழ்வு பகுதியால் சங்கத்திற்கு வழங்கப்பட்டதாகவும் செயலகமும் பால்மா பைக்கட்டுக்கு 120 ரூபா விலையை நிர்ணயித்து தமக்கு வழங்கியதாகவும் கூறினார்.

இதன் அடிப்படையிலேயே சங்கம் இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்த பால்மா பைக்கட்டை வழங்கி வருகின்றது என்றும் அவர் சொன்னார்.

குழந்தைகளின் பாவனைக்கென உற்பத்தி செய்யப்பட்ட பால்மாவை நிவாரண விநியோகத்துக்குத் தம்மீது கட்டியடிப்பதாக வயது முதிர்ந்த ஒருவர் கவலையுடன் கூறினார்.

(இ—17)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, நவ. 29

ஏழாலை களபாவோடை அருள் மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை நாட்டில் அமைதி, சமாதானம், சாந்தி நிலவ இறை ஆசி வேண்டி காலை 7 மணிக்கு முதல் மாலை 5 மணிவரை "அகண்டநாம பூசை, ஆராதனை வழிபாடுகள் இடம்பெறும். (ம-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 29

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் இன்று புதன்கிழமை மாலை 5 மணியளவில் பூர்வபக்கம் சதுர்த்தித் திருவிழா விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் இடம்பெறும். (ம-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 29

யாழ். திருநெல்வேலி புனித சவேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

(ம-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 29

பருத்தித்துறை பன்னையம்பதி அருள்மிகு ஸ்ரீ இராஜேஸ்வரி ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறும்.

அம்பாளின் யந்திர பூசை கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 9 தினங்கள் இணுவில் ஸ்ரீ சிவன்கோயிலில் முற்பகல் 10 மணி தொடக்கம் இடம் பெறும்.

(ம-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 29

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று புதன்கிழமை மாலை 4 30 மணியளவில் வளர்பிறை பூர்வபக்கம் சதுர்த்தித் திருவிழா விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் இடம்பெறும்

நாடு நலன்பெற வேண்டியும், நாட்டில் ஒற்றுமை, அமைதி, சமாதானம், சுபிட்சம் நிலவ வேண்டியும், மக்கள் மனநிம்மதியுடன் வாழ இறை ஆசிவேண்டியும் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை தொல்புரம் மத்திய சனசமூக நிலையம் வாசிகசாலையின் ஆதரவில் பஜனை கூட்டுப்பிரார்த்தனை வழிபாடுகள் நடைபெறும்.

(ம-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ 29

சித்தன்கேணி பெரியவளவு அருள்மிகு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் கோயிலில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் வளர்பிறை பூர்வபக்க சதுர்த்தித் திருவிழா விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

(ம-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 29

வட்டுக்கோட்டை வடக்குப் பிரமணாச்சி தோட்டம் அருள்மிகு ஸ்ரீகற்பகப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் இன்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் வளர்பிறை பூர்வபக்க சதுர்த்தித் திருவிழா, விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

நாடு நலம்பெறவும் மக்கள் மனநிமதியுடன் வாழவும் இறை ஆசி வேண்டி பஜனை-கூட்டுப் பிரார்த்தனை என்பனவும் நடைபெறும்.

(ம-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 29

இணுவில் கந்தசுவாமி கோயிலில் புதிய கண்டாமணி ஏற்றுவிழா நாளை வியாழக்கிழமை காலை 7-44 மணி தொடக்கம் 9-14 வரையான சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்டாமணி வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்டிருந்தது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலகங்கள், பாடசாலைகளில் மேலதிக ஆளணி இருக்கக் கூடாது

## மாகாணக் கல்வி அமைச்சுச் செயலர் பணிப்பு

வலிகாமம் தெற்கு, நவ. 29 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து கல்வி அலுவலகங்களிலோ, பாடசாலைகளிலோ அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினருக்கு மேலதிகமாக அலுவலர்களையோ ஆசிரியர்களையோ, எவரையும் கடமையில் ஈடுபடுத்த வேண்டாம் என்று வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு செயலாளர் க. பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினருக்கு மேலதிகமாக எவராவது தற்போது கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தால் மேலதிகமாக உள்ள ஆளணியினர் உடனடியாக அவர்களுக்குப் பொருத்தமான ஆளணி வெற்றிடமுள்ள பதவிகளுக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களை அவர் சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

2001 ஜனவரி முதலாம் திகதிக்குப்பின் அலுவலகங்களில் அல்லது பாடசாலைகளில் மேலதிக ஆளணியினர் இருந்தால் அவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை சம்பந்தப்பட்ட மேலதிகாரியிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்—

அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்குத் தெளிவான பொறுப்புப் பட்டியல் அதிகாரமளிக்கப்பட்டவரால் கையொப்பமிட்டு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்எனவும்— செயலாளர் க. பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ம — 152)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் அருணாசலம் ஆறுமுகம் (J.P)

(முன்னாள் உப அதிபர் — சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலை)

அவர்கள் இறைபதம் அடைந்தமைக்கு அன்னாரின் குடும்பத்தினருக்கு, எமது குடும்பத்தினர் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எஸ் புஸ்பநாதன்
குடும்பத்தினர்
மீசாலை மேற்கு.

செட்டித்தரை வீதி,
நெல்லியடி.

(80979)



## அவசர கலந்துரையாடல்

க. பொ. த. (உ/த) புள்ளிகளின் அடிப்படையில் தமிழ்மொழி மூல ஆசிரியர்களை நியமிக்கும் முகமாக கடந்த ஜூலை மாதத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை (30 - 11 - 2000) வியாழன் மு. ப. 10.00 (பு.நே) மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

★ நியமனம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

பிரதிநிதிகள்.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(80978)



## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Centre

சாந்தி சினிமா முன்பாக
(மேல்மாடியில் வலது பக்கம்)

- Spoken English
- சிங்களம்
- Short hand Typing

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 01-12-2000

★ பயிற்சி முடிந்ததும் 'சான்றிதழ்' வழங்கப்படும்.

நிர்வாகி
இ லோகநாயகி

(80977)


## சுற்றிவளைப்பு

ஆவரங்கால் பகுதியில் நேற்று இராணுவத்தினர் சுற்றிவளைப்புதேடுதல் நடத்தினர்.

இந்த சுற்றி வளைப்பின் போது பருத்தித்துறை யாழ்ப்பாண வீதியில் போக்குவரத்தில் இருந்த வாகனங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (இ-15)

## நூல் வெளியீடு

யாழ் உயர் தொழில் நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் வித்தகம் சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று புதன் காலை 10 மணிக்கு நடைபெறும்

மாணவர் ஒன்றியத் தலைவர் வே.சிவாகரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் கு. வி குகேந்திரன் கலந்துகொள்வார்


## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் 04—12—2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்டாட்) பதிவு செய்தவர்களே கேள்விப்பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையவராவர்.

04—12—2000 ஆம் திகதி காலை 10.00 மணி வரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| வல்வெட்டித்துறை நவீன சந்தைக் கட்டடம் ( 3 ஆம் கட்டம் ) அமைத்தல் | 300/- | 1000/- |

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ம. க. சிவாஜிலிங்கம்
தலைவர்
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
20—11—2000

(சி/14013)



## அறிவித்தல்

கட்டடத் திணைக்களக் காரியாலயம் (மாகாணம்) 29-11-2000 ஆம் திகதியில் இருந்து கடற்கரை வீதியில் அமைந்துள்ள காரியாலயத்தில் கடமைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றேன்,

இ. சிறிகாந்தா
பிரதம பொறியியலாளர்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)
யாழ்ப்பாணம்.

(சி/14018)



## சமாதானத்துக்கான சுவரொட்டிப் போட்டி

யாழ்ப்பாண Y. M. C. A மேற்படி போட்டி ஒன்றினை 30 வயதுக்கு உட்பட்ட இரு பாலாருக்கும் நடத்தத் தீர்மானித்துள்ளது. இச் சுவரொட்டிகள் "இதுவரை நடந்த கொடூர யுத்தத்தின் வேதனைகள் போதும். அனைத்துலக அளவில் எழுந்து வரும் சமாதானத்துக்கான முன்னெடுப்புகளைப் போரில் ஈடுபடும் அனைவரும் உண்மையான மனதுடன் வரவேற்க வேண்டும்" என்ற பொதுமக்களின் அவாவினையும், வலியுறுத்தலையும் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும்.

இப் போட்டிக்கென அனுப்பப்படும் சுவரொட்டிகளில் தெரிவு செய்யப்படும் 13 சுவரொட்டிகளுக்குக் கவர்ச்சிகரமான பரிசுகளும், பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்களும் யாழ். Y. M. C. A மண்டபத்தில் நடைபெறும். சுவரொட்டிக் கண்காட்சி நிகழ்வின்போது வழங்கப்படும்.

தாளின் அளவு: A4
முடிவு திகதி: 10 டிசெம்பர் 2000

போட்டியாளரின் சுருக்கமான சுயவிவரம் தனியான தாளில் எழுதிப் பாடசாலை அதிபர் அல்லது ஒரு மதகுருவின் உறுதிப்படுத்தலுடன் சேர்த்து நேரடியாகவோ, தபால் மூலமோ அனுப்ப வேண்டிய முகவரி:

சுவரொட்டிப் போட்டி,
Y. M. C. A.
109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(80974)



## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்
### திருச்செல்வம் ரவிதர்சன்

தோற்றம் 1985-02-06 — மறைவு 1999-12-11

திதி: சதுர்த்தி 29-11-2000

ஓராண்டு ஆனாலும்
ஓயவில்லை உன் நினைவு
எமைப்பிரிய உன் உள்ளம் துணிந்ததுவோ?
கலைகள் எல்லாம் கற்று
எமை மகிழ்விப்பாய் என்றிருக்க
எமனை அழைத்துப் போனதேனோ!

உனது பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, தம்பி மற்றும்
உற்றார், உறவினர்.

பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை,
தலையாழி, கொக்குவில்.

(80957)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை

# இனியும் புலிகளிடம் ஏமாற நாம் தயார் இல்லை!

## பிரதமர் ரத்னசிறி கூறுகிறார்

கொழும்பு,நவ.29

புலிகள் முற்றாக ஒழிக்கப்படும் வரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. இனியும் நாம் புலிகளிடம் ஏமாறத் தயார் இல்லை. கடந்த காலங்களில் விட்ட தவறுகளை இனியும் விடமாட்டோம்.

மேற்கண்டவாறு பிரதமர் ரத்ன சிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை ஹொரனையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் பிரதமர் ரத்னசிறி மேலும் கூறியதாவது:-

அரசாங்கம் சமாதான முயற்சிகளில் அக்கறைகாட்டி வருவதால் போர் நிறுத்தமொன்று மேற்கொள்ளப்படலாம் எனச்சிலர் எண்ணங் கொண்டுள்ளனர். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் போர்நிறுத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதை உறுதியாகக் கூறிவைக்க விரும்புகிறேன். கடந்தகால அனுபவங்கள் எமக்கு நல்ல பல படிப்பினைகளைக் கற்றுத் தந்துள்ளன. பல தடவைகள் புலிகள் எம்மை ஏமாற்றியுள்ளனர். இனியும் நாம் ஏமாறத் தயாராக இல்லை.

புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சமிக்ஞைகளைக் காண்பித்துள்ளனர்.

சமாதானப் பாதைக்குள் புலிகள் நுழைவார்களேயானால் அதனை நாம வரவேற்கின்றோம். சமாதானம் என்ற போர்வையில் தம்மை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்காகப் போர் நிறுத்தத்தைக் கேட்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

சில வெளிநாடுகள் எமது நாட்டின் பிரச்சினையை வேறுநாடுகளின் பிரச்சினைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முயற்சிக்கின்றன. ஆனால், பிரபாகரன் என்பவர் மனிதாபிமானம் என்றால் என்னவென்றே தெரியாத ஒரு கொலைகாரன் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்குச் சாத்வீக நடைமுறை பயன் தரப் போவதில்லை. பிரச்சினைகள் எந்த உருவத்தில் வருகின்றனவோ அதே வழிகளில் தான் அவற்றை முறியடிக்க முடியும்.

ஜனாதிபதி தமது நாடாளுமன்ற உரையின்போது என்ன கூறினார் என்பதை மீள நினைவூட்ட விரும்புகிறேன். 'தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண முயற்சிக்கும் அதேசமயம், பயங்கரவாதத்தை இராணுவ ரீதியில் ஒழித்துக் கட்டுவதே அரசின் ஒரே நோக்கமாகும்'. இந்த அடிப்படையில் நோக்கும்போது எனது நிலைப்பாட்டிலும், ஜனாதிபதியின் நிலைப்பாட்டிலும் எந்த விதமான மாற்றமும் கிடையாது.

நாட்டில் அமைதியும், சமாதானமும் ஏற்படவேண்டுமானால் பயங்கரவாதம் ஒழித்துக் கட்டப்பட வேண்டியது மிக அவசியமாகவே நாம் கருதுகிறோம். எமது உள்நாட்டுப் பிரச்சினையில் சமாதானத்தைத் தேடித்தர உலகின் எந்த நாடு பங்களிப்புச் செய்ய முன்வந்தாலும் அவர்களின் நோக்கங்களுக்கும் தாளத்திற்கும் தலை அசைக்க நாம் தயாராக இல்லை. நேர்மையாகச் செயற்படுபவர்கள் விடயத்தில் நாமும் நேர்மையாகச் செயற்படத் தயாராக இருக்கிறோம்.

எமது எதிர்காலச் சந்ததியினர் நிம்மதியாக வாழ வேண்டுமானால் எமது காலத்திலேயே நாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். நாம் எதிர்கொண்ட சவால்கள் அவர்கள் காலத்திலும் தொடரக் கூடாது. இந்த நாட்டில் வாழும் சகல இனங்களும் சமாதானமாக வாழ்வதற்கு யாரும் தடையாக இருக்கக் கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

நாட்டுப் பிரிவினைக்கும், பயங்கரவாதத்துக்குமே சிங்கள மக்கள் எதிர்ப்பே தவிர, தமிழ் மக்களுக்கு எதிரானவர்களாக சிங்கள மக்கள் ஒருபோதும் செயற்படமாட்டார்கள். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் முன்னர்போன்று எதிர்காலத்திலும் சமாதானமாகவும், ஒருதாய் மக்கள் போன்றும் வாழவேண்டும். அதற்குரிய சாத்தியமான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதே எமது அரசின் ஒரேஇலட்சியமாகும். அதனை அடைவதில்தான் நாம் தீவிர முனைப்புக் காட்டி வருகின்றோம்.

இப்படி அவர் கூறினார். (இ-4)

## தபாலகங்களில் நிரப்பப்படாத நிலையில் 82 வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.மாவட்ட தபாலகங்களில் 82 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருப்பதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் காணப்படும் இந்த வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களை நியமிக்குமாறு பல தடவை கோரப்பட்ட போதும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொகுதி (அ) தரம்-III இல் பிரிவு 'அ'வில் இரு வெற்றிடங்களும், பிரிவு 'ஆ'வில் இரு வெற்றிடங்களும், தொகுதி(ஆ) தரம்-Iஇல் 13வெற்றிடங்களும் தரம்II இல் 62வெற்றிடங்களும் ஆங்கில தட்டெழுத்தாளருக்கு ஒரு வெற்றிடமும், புத்தக பதியுநருக்கு ஒரு வெற்றிடமும், சிறாப்பர் பதவிக்கு ஒரு வெற்றிடமுமாக குடாநாட்டு தபாலகங்களில் 82 வெற்றிடங்களுக்கு ஊழியர்கள எவரும் நியமனம் செய்யப்படாமல் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இனிமேலாவது உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து குடாநாட்டு தபாலகங்களில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது. (ம-6)

ஒன்றுபடுத்திய அஞ்சற்சேவைத்

## மின் கட்டணம் உயரும்?

கொழும்பு,நவ.29

சமீபத்தில் டீசல் விலை உயர்ந்ததை அடுத்து இலங்கை மின்சார சபை உள்ளூர் மின்சாரக் கட்டணத்தை பத்துச் சதவீதத்தினால் உயர்த்த நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டீசல் விலை உயர்வு காரணமாக தனியார் மூலம் வழங்கப்படும் மின்சாரத்துக்கு யுனிட் ஒன்றுக்கு அரசு 4 ரூபா 80 சதம் செலவிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் மொத்த மின்சார உற்பத்தியில் 50 சதவீதம் அனல் மின்சாரம் [illegible]ம் பெறப்படுகிறது. இதில் 30 சதவீதம் தனியாரினால் உற்பத்தி செய்யப்படுகிறது. (இ)

## மரக்கறி, முட்டை விலை உயர்வு

வலிகாமம்தெற்கு,நவ.29

மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான மரக்கறி வகைகள், மீன், முட்டை என்பவற்றின் விலைகள் அண்மைக் காலத்தில் மிகவும் உயர்வடைந்துள்ளன.

சந்தைகளில் வெங்காயம் கிலோ 40 ரூபாவுக்கும் கூடுதலாக விலை போகின்றது. அதே போன்று மிளகாய் கிலோ 150 ரூபாவுக்கும் கிழங்கு கிலோ 70 ரூபாவுக்கும் கத்தரி, பயற்றங்காய் போன்றன 60 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (இ-152)

## அனுமதி அட்டைகளைப் பெறக் கோரிக்கை

சாவகச்சேரி,நவ.29

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை மேற்படிபாடசாலை நடைபெறும் ரலன்ட கல்வி நிலையத்திற்குச் சமுகமளித்துப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் திருமதி சி.சிவநாதன் தெரிவித்துள்ளார். (ம-31)

## சந்நிதியான ஆச்சிரம வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.29

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் டிசம்பர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணிக்கு சொல்வாருதி இரா.கேதீசனின் "கம்பன் சொன்ன அறம்" எனும் தலைப்பிலான சிறப்புச சொற்பொழிவு இடம்பெறும். இதன அறிமுகவுரையை ஆ.மோகனசுந்தரம் வழங்குவார். (ம-30)

## செயலமர்வு

தென்மராட்சி,நவ.29

தென்மராட்சி கல்விவலயத்தைச் சேர்ந்த பளை, கொடிகாமம் ஆகிய கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பு செயலமர்வு எதிர்வரும் இரண்டாம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

தரம் 1ஏபி, 1சி பாடசாலைகளின் அதிபர்கள் பிரதி அதிபர்கள் தரம்II, தரம்III ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார் (ம-117)


க.பொ.த. (சா/த) பரீட்சைக்கான
வழிகாட்டல் கருத்தரங்கு 2000
இல் பங்குபற்றும் மாணவர்களுக்கு



சர்வதேச லயன்ஸ் கழகம்
மாவட்டம் 306, B
இலங்கை
பிராந்தியம் - 9
பிராந்தியத் தலைவர்
லயன் வைத்திய கலாநிதி
வை.தியாகராஜா
அவர்களின்

ஆசிச்செய்தி

அதிபர் அவர்களே! விரிவுரையாளர்களே!
மாணவர்களே! லயன்ஸ் கழக அங்கத்தவர்களே!
எல்லோருக்கும் எமது காலை வணக்கம்.

எமது கழகமானது சமூகப் பணியாற்றி வருவது நீங்கள் அனைவரும் அறிந்ததே. எனது பார்வையில் எமது சமூகத்திற்கு இன்றைய சூழ்நிலையில் கல்விப்பணி ஆற்ற வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் இடப்பெயர்வு காரணமாக மாணவர்கள் தமது வீட்டை விட்டு இடம்பெயர்ந்து படிப்பதற்கு பூரண வசதி இன்றியும் ஒரு பாடசாலையில் இரு பாடசாலைகள் இயங்குவதாலும் தாம் படித்த பாடசாலை ஆசிரியர், தனியார் கல்வி நிறுவனங்கள் போன்ற சூழல் மாறுபட்டதாலும் தமது குடும்பத்தில் பல இழப்புகள் ஏற்பட்டுள்ளதாலும் கல்வி கற்பதில் பல சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். எனவேதான் எமது கழகமானது மாணவர்களை க.பொ.த. (சாதாரணதர) பரீட்சைக்கு வழிகாட்டுகின்ற வகையில் செயற்பட்டு வருகிறது. பாடக் குறிப்புகள் துறைசார்ந்த ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டு அனுபவம் மிக்க ஆசிரியர்கள் இலவசமாகத் தங்களுக்கு விரிவுரையாற்ற ஒழுங்கு செய்துள்ளோம். இவ்வழிகாட்டல் மாணவர்களுக்கு சிறந்த பயனைத் தரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு - எனவே மாணவர்கள் கல்லூரியின் ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் கருத்தரங்கின் உச்சப்பயனைப் பெறலாம் எனக்கூறி, கல்லூரிகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் பெற்ற கல்வியை எமது கருத்தரங்கானது மீட்டல் செய்ய மெருகூட்டும் என்ற நம்பிக்கையுடனும் நீங்கள் அனைவரும் சிறந்த பெறுபெறுகளைப் பெற இறைவனை இறைஞ்சுகின்றேன். மேலும் இக்கருத்தரங்கு நடைபெற பல வழிகளிலும் உதவி புரிந்த, புரிகின்ற, புரிய இருக்கின்ற அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள். தொடர்ந்து எமது கல்விப்பணி தொடரும்.

(C/14016)



யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பாராட்டி வாழ்த்துகிறோம்

க.பொ.த (உ/த) 2000 பரீட்சையில்
மிகச் சிறந்த பெறுபேறுகள் பெற்ற

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | குணம் சசிக்குமார் | - 3A | மாவட்டநிலை | - 1 கலை |
| 2. | துரைராசா சற்குணராசா | - 2A,B | ” | - 11 கலை |
| 3. | கந்தசாமி ஜெயா | - 2A.C | ” | - 109 கலை |
| 4. | பெனார்ண்டோ கமிலஸ் | - 2B,C,S | ” | - 206 கலை |
| 5. | வரதராஜா கிரிஜா | - 2A,2B | ” | - 58 வர்த். |
| 6. | திருநாவுக்கரசு நிலாஜினி | - 2A,B,C | ” | - 89 கலை |
| 7. | சீவரட்ணம் சுபாகரன் | - A,3B | ” | - 226 கலை |

ஆகியோரையும
பல்கலைக்கழகப் புகுமுகத் தகுதி பெற்ற ஏனைய 32 மாணவச் செல்வங்களையும் இவர்களைக் கற்பித்த ஆசான்கள், அதிபர்கள் ஆகியோரையும் மனமார வாழ்த்துகிறோம்.

பெற்றோர்கள்,
நலன் விரும்பிகள்.

(80997)



உ
சிமயம்

கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவுமான
பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின்

பவளவிழா அழைப்பு

காலம்: நிகழும் விக்கிரம வருடம் கார்த்திகை 18ஆம் நாள் 2000.12.03 ஞாயிற்றுக்கிழமை

இடம்: தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபம்.

தலைவர்: திரு. சு. பரமநாதன் (பவளவிழாச்சபைத் தலைவர்)

காலை 6.30 மணிக்கு விசேட அபிஷேக பூசை வழிபாடு
9.00 மணிக்கு விழா ஆரம்பம்

நகுலேஸ்வர பக்தர்கள், சைவமெய்யன்பர்கள் அனைவரும் விழாவில் பங்கு கொண்டு, பவளவிழாச் சிறப்பு மலரையும் பெற்றுக் குருவருளும் [illegible] பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(80993)

- பவவிழாச் சபையினர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B

LOVE, LIGHT & CARE
2000/2001 District 306 B Sri Lanka

## பிராந்தியம் 09 இன் பிராந்தியத் தலைவரின் கல்வி மேம்பாட்டு செயற்திட்டம்

### க.பொ.த(சா/த) மாணவர்களின் பொதுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு - 2000

**காலம்: நவம்பர் 29, 30, டிசம்பர் 01, 02 (04 நாள்கள்)**

காலை 9.15 11-15 விரிவுரை I | காலை 11-15 11-45 இடைவேளை | காலை 11-45 பி.ப 1-45 விரிவுரை II

**விரிவுரை நடைபெறும் இடங்கள்:**

யாழ்.மத்திய கல்லூரி.
யாழ்.இந்துக்கல்லூரி.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி.
இணுவில் மத்தியகல்லூரி.
மல்லாகம் மகா வித்தியாலயம்.
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
மானிப்பாய் இந்துக்கல்லூரி.
மானிப்பாய் மெமோறியல்.
நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
வேலாயுதம் மகா வித்தியாலயம்
கரவெட்டி ஞானாசாரியார்
ஊர்காவற்றுறை சென் அந்தனீஸ்.

பாடங்களும் விரிவுரையாளர்களும் (ஒவ்வொரு பாடத்திற்கும் 04 மணிநேர கருத்தரங்கு இடம்பெறும்)

**கணிதம்**

| | |
|---|---|
| திரு.த.வரதராஜா | யாழ்.மத்திய கல்லூரி. |
| திரு.பா.இராஜசேகரம் | ஆசிரிய ஆலோசகர், யாழ்.வலயம். |
| திரு.V.சிவகுமார் | ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் வலயம். |
| திரு.T.தயாளன் | யாழ். மத்திய கல்லூரி. |
| திரு.S.வாமதேவன் | கோண்டாவில் இராமகிருஷ்ணா. |
| திரு. இரா.அருட்செல்வம் | பிரபல தனியார் நிறுவன ஆசிரியர். |
| செல்வி S.வீரசிங்கம் | உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவகம். |
| திரு.S.பரமலிங்கம் | நெடுந்தீவு மகா வித்தியாலயம். |
| திரு.T.தவநேசன் | சாவகச்சேரி இந்துக்கல்லூரி. |
| திரு.S.இராமகிருஷ்ணர் | கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம். |

**தமிழ்**

| | |
|---|---|
| திரு.ஞான.திருக்கேதீஸ்வரன் | யாழ். மத்திய கல்லூரி. |
| திரு.N.பாலா | மானிப்பாய் மெமோறியல். |
| திரு.நாக.தமிழிந்திரன் | யாழ். மத்திய கல்லூரி. |
| திரு.S.தர்மா | பிரபல தனியார் நிறுவன ஆசிரியர். |
| செல்வி வனிதாராணி | நெடுந்தீவு மகா வித்தியாலயம். |
| செல்வி S.பொன்னையா | ஆசிரிய ஆலோசகர், தீவகம். |
| திரு.விநாயகமூர்த்தி | உடுப்பிட்டி அ.மி.கல்லூரி. |
| திரு.T.நாகேஸ்வரன் | சாவகச்சேரி இந்துக்கல்லூரி. |
| திரு.S.ஆர்த்திகன் | |

**விஞ்ஞானம்**

| | |
|---|---|
| திரு. A.சோமாஸ்கந்தன் | முன்னாள் ஆசிரிய ஆலோசகர். |
| திரு. S.இரவீந்திரநாதன் | ஆசிரிய ஆலோசகர், யாழ்.வலயம். |
| திரு. S.இரட்ணசிங்கம் | விஞ்ஞான வள நிலையம், யாழ்.வலயம். |
| திரு. P.சிறிஸ்கந்தராஜா | யாழ்.மத்திய கல்லூரி. |
| திரு. P.தியாகலிங்கம் | பாசையூர் சென் அந்தனீஸ். |
| திரு. S.தயாபரன் | நெடுந்தீவு றோமன் க.த.கலவன். |
| திரு. R.ஜெகதீஸ்வரன் | காரைநகர் Dr.தியாகராஜா ம.வித்தியாலயம். |
| திரு. S.கைலாசபதி | அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம். |
| திரு. E.இராஜலிங்கம் | சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| திரு. P.செல்வநாயகம் | கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம். |
| திரு.V.சிவசிதம்பரம் | அதிபர், கரவெட்டி ஞானாசாரியார். |
| திரு.A.K. மூர்த்தி | அதிபர், காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயம். |

**சமூகக்கல்வி**

| | |
|---|---|
| திரு. A.புவனேந்திரன் | விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை. |
| திரு. சபா.குகதாசன் | ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலயம். |
| திரு. K.கணபதி | ஆசிரிய ஆலோசகர், தீவக வலயம். |
| திரு. S.ஐங்கரன் | யாழ். மத்திய கல்லூரி. |
| திரு. இரா. கணேஸ் | நெடுந்தீவு மகாவித்தியாலயம். |
| திரு. P.கணேசலிங்கம் | யாழ். மத்திய கல்லூரி. |
| திரு. M.வேலாயுதபிள்ளை | கொக்குவில் இந்துக் கல்லூரி. |
| திரு. V. நாகநாதன் | கப்பூது மகா வித்தியாலயம். |
| திரு. A.சிவநாதன் | ஹாட்லிக் கல்லூரி. |
| திரு. K.தர்மலிங்கம் | கரவெட்டி ஞானாசாரியார். |

★ அச்சடித்த, சுருக்க கைஏடுகள், வினாப்பத்திரங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.
★ பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் நடத்தப்படும் மேற்படி கருத்தரங்கில் ஒழுக்கக்கேடாக நடந்து கொள்வோர் உடன் விலக்கப்படுவர்.
★ உரிய நேரத்துக்கு 10 நிமிடங்களுக்கு முன்னரே மண்டபத்தில் அமர்ந்து கொள்ளவேண்டும்.

(c/14012)

*லயன் Dr.வை.தியாகராசா*
*பிராந்தியத் தலைவர், பிராந்தியம் - 09.*

விளம்பர அன்பளிப்பு: **உதயன் நிறுவன அனுசரணையுடன்**
லயன் F.A. *சில்வெஸ்டர்* - கோப்பாய்.



உ

# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் கார்த்திகை மாதம் 14ஆம் நாள் இன்று (29.11.2000) புதன்கிழமை
காலை (ப.நே) 8.37 மணி முதல்9.22 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

## ஸ்ரீ நிஷானந்தா ஜுவல்லறி ஸ்ரீ

என்னும் ஸ்தாபனத்தைத் திறந்து வைக்கவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து விழாவைச் சிறப்பித்து எம்மை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(லிங்கன் கூல்பார் அருகில்)

தங்கள் நல்வரவை நாடும்:
A. ஆனந்தன்,
No. 15, கதிரேறல் வீதி,
யாழ்ப்பாணம்.

* நவநாகரிகத்தின் அறிமுகம்
* இதுவே உங்களின் புதுமுகம்
* அழகு நங்கையர்களின் அழகுச் சோலை

## நிஷானந்தா ஜுவல்லறி

(80961)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு. சின்னையா நடராஜலிங்கம்**

(AREA MANAGER, REGIONAL OFFICE, BANK OF CEYLON, JAFFNA.)

எமது கிராமத்தைச் சேர்ந்த உயர்திரு. சின்னையா நடராஜலிங்கம் அவர்கள் இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளராக (AREA MANAGER) பதவி உயர்வு பெற்றமையையிட்டு அகமகிழும் நாம் அன்னாரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர்கள் என்றென்றும் எம்முடன் வாழ்ந்து சீரிய சேவையாற்ற வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காந்தியூர், புலோலி.

(C/13999)

திரு.ம.பாலதவேந்திரனும் குடும்பத்தினரும்.


# பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரிக்கு முன்பாக 6 மாடிகள் கொண்ட தனியார் குடியிருப்பு

## மாணவர்கள், பெற்றோர் கடும் ஆட்சேபம்

கொழும்பு,நவ.29

பம்பலப்பிட்டி லோறன்ஸ் வீதியிலுள்ள கொழும்பு இந்துக் கல்லூரி நுழைவாயிலுக்கு முன்பாக ஆறுமாடிகள் கொண்ட தனியார் குடியிருப்பு மனைகள அமைக்கப்படவிருப்பதற்குப் பெற்றோரும் மாணவர்களும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். கொழும்பிலுள்ள பிரபல கல்லூரிகளில் ஒன்றான பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் 4000 க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

இக்கல்லூரி வாசலுக்கு முன்பாக ஆறுமாடிகள் கொண்ட குடியிருப்பு மனைகள் அமைவதால ஏற்படவிருக்கும் விபரீதங்கள் பற்றிப் பெற்றோர் கவலையும் விசனமும தெரிவித்துள்ளனர். ஆறுமாடிக் குடியிருப்புத் தொகுதியானது, கல்லூரி மாணவர்களின் காற்றோட்ட வசதியைத் தடுப்பதுடன், மாணவர்களின் சுகாதாரத்தையும் சுற்றுப்புறச் சூழலையும் பெரிதும் பாதிக்கும் என்றும், கல்லூரி வாசலில் சனநெருக்கடி , போக்குவரத்து நெரிசல் ஆகியவற்றை பாரியளவில் ஏற்படுத்தும் என்றும் கல்லூரி மாணவர்கள் வாகன விபத்தக்கள் நெரிசல்களில் சிக்கும் அபாயம் ஏற்படுமென்றும், கொழும்பு மாநகரசபை இவ்விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் பெற்றோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(இ-4)

## மாணவனுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம்,நவ.29

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவன் இராஜரட்ணம் குணசீலன் பல ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியைக் கண்டெடுத்து உரியவரிடம் சமர்ப்பித்த செயலைப் பாராட்டும் வைபவம் ஒன்று அண்மையில் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்றது.

கல்விக் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக பட்டப்படிப்புகள் துறைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் மாணவனின் சிறந்த பணியைப் பாராட்டி உரையாற்றினார்.

இந்த மாணவன் கண்டெடுத்த தாலிக்கொடியை உரியவரிடம் ஒப்படைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தமைக்காகக் கல்லூரி பீடாதிபதி கமலநாதனும் பாராட்டுக்குரியவர் என்றும் அவர் சொன்னார்.

எமது பாரம்பரிய கலாசாரப் பண்புகள் பேணப்பட்டு வருகின்றமைக்கு இந்த நிகழ்வு சான்றாகவுள்ளது. செல்வன் குணசீலனின் செயற்பாடு எமது சமூகத்தில் உள்ள அனைவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

மாணவனுக்குப் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டது. (ஜ-7)

## நிபுணத்துவப் பரீட்சை நடைபெறாது

வலிகாமம் தெற்கு,நவ.29

9ஆம் தர முடிவில் தேசிய மட்டத்திலான நிபுணத்துவப் பரீட்சை நடைபெறமாட்டாது எனவும் 6ஆம் தரம் முதல் 9 ஆம் தரம்வரையான கனிஷ்ட இடைநிலைக் கல்வியைப் பூரணப்படுத்திய மாணவர்களுக்கு 9 ஆம் தர முடிவில் மாணவர் விவர அறிக்கை **(Trans Cripts)** ஒன்றை இவ் வருடத்திலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வி, உயர்கல்வி அமைச்சு மேலதிக செயலாளர் (கல்வி அபிவிருத்தி) பேராசிரியர் எஸ்.எல்.பெரேரா அறிவித்துள்ளார்.

6 ஆம் தரம் முதல் 9 ஆம் தரம் வரை வருடம் முழுவதும் வகுப்பறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கணிப்பீடுகளின் அடிப்படையிலும், வருட முடிவில் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் பரீட்சையின் அடிப்படையிலும் மாணவர் விவர அறிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.

2000 ஆம் ஆண்டில் இச் சான்றிதழை வழங்குவதற்கு 9 ஆம் தரத்துக்குரிய விவரங்கள் மட்டும் பயன்படுத்தப்படும்.

எதிர்வரும் காலங்களில் 6 தொடக்கம் 9 வரையான தரங்களின் விவரங்கள் பயன்படுத்தப்படுவதுடன், தரம 6 இல் இருந்தே பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைகளையும் வருட இறுதிப் பரீட்சைகளின் முடிவில் மாணவர் வெளிப்படுத்தும் நிபுணத்துவம் தொடர்பான அறிக்கைகளையும் முறையாகவும் பாதுகாப்பாகவும் நடைமுறைப்படுத்திப் பேணுமாறும் பேராசிரியர் எஸ்.எல்.பெரேரா அறிவித்துள்ளார். (ஜ-152)

# 10 லட்சம் இலங்கையர்கள் வெளிநாடுகளில் தஞ்சம்!

நாட்டில் நீண்டகாலமாகத் தொடர்ந்து வரும் இனப்பிரச்சினை காரணமாக சுமார் 10 லட்சம் இலங்கையர்கள் உலகெங்கிலும் உள்ள நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று வெளிநாட்டுத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களில் 9 லட்சத்து 75 ஆயிரம் பேர் தமிழர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளதாகவும் - பெரும்பாலான தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்க நாடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் இருந்து செல்லும் அகதிகளின் பிரச்சினைகள் அந்த நாடுகளின் தேசியப் பிரச்சினைகளில ஒன்றாக உருவெடுத்து வருவதனாலேயே இலங்கை விவகாரங்களில அவை தலையிட முயல்வதாகக் கூறப்படுகிறது. (ம-20)


## வாழ்த்துகின்றோம்



கைதடி கிழக்கைச் சேர்ந்த ச.வரதராசா தம்பதியின் அன்புமகளும் கைதடி வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவியுமான

**செல்வி வரதராசா கலெக்ஷனா**

இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட இந்து சமயக் கட்டுரை, பொதுஅறிவு ஆகிய போட்டிகளில் கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தற்காலிக முகவரி
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

அப்பம்மா,
சித்தப்பாமார் குடும்பம்,
மாமாமார் குடும்பம்,
கொழும்பில் வசிக்கும் பெரியம்மா குடும்பத்தினர், வெளிநாட்டில் வசிக்கும் அண்ணமார்
மற்றும் சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தர்களும்.

(C/14009)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமிகு.அ.அலெக்ஸ்சாண்டர்**

அதிபர் தரம் I ற்கு பதவி உயர்வு பெற்றுள்ள எங்கள் அதிபர் திரு. அலெக்ஸ்சாண்டர் அவர்கள் மென் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று பேருடனும் புகழுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நல்லுறவு மன்றம்,
யா/நவாலி மகாவித்தியாலயம்,
மானிப்பாய்.

(80959)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு. சின்னையா நடராஜலிங்கம்**

(AREA MANAGER, REGIONAL OFFICE BANK OF CEYLON, JAFFNA)

எமது கிராம வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்டவரும் என்றும் எம்முடன் வாழ்ந்து வரும் எமது கிராமத்தவருமான

**திரு. சின்னையா நடராஜலிங்கம்**

யாழ். பிராந்திய முகாமையாளராக (AREA MANAGER) பதவி உயர்வு பெற்றமையையிட்டு மனமகிழும் நாம் அவரது சேவை மென்மேலும் சிறப்புற்று மக்களுக்கு சேவைபுரிய வேண்டும் என எமது பகுதி மக்கள் சார்பில் இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாருக்கு எமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புலோலி தெற்கு,
புலோலி.

காந்தியூர் சனசமூகநிலையம்,
காந்தியூர் இளம்பிறை விளையாட்டுக்கழகம்.

(C/14000)





உ
ஓம் சாயிராம்



## மங்களகரமான நகைக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் கார்த்திகை 15 ஆம் நாள் நாளை (30-11-2000) வியாழக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் 8.28 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்

**மானிப்பாய் பிரதான வீதியில் அமைந்துள்ள**

# அன்பு ஜுவலேர்ஸ்
# ANBU JEWELLERS

என்னும் நகையகத்தை ஆரம்பிப்பதற்கு திருவருள் கூடியுள்ளது. எனவே இவ்வைபவத்தில் உறவினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகப் பெருமனதுடன் ஏற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

'தெய்வீகம்'
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

(80927)

அன்பு ஜுவலேர்ஸ்
க. பஞ்சலிங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகலவித கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ்கன் ஆகியன திருத்திக் கொடுக்கப்படும். சு.நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி)- கன்னாதிட்டிச்சந்திக்குஅருகில், யாழ்ப்பாணம். (தவிர்க்க முடியாத காரணத்தால் திருத்த வேலை சில தினங்களாக நடைபெறவில்லை.) (80785)

## விற்பனைக்கு

எம்மிடம் 15க்கும் மேற்பட்டஇன ரோஜா கன்றுகளும் நல்லின செவ்விளநீா கன்றுகளும பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சி.ஞான குமாரன் (ஆசிரியர்), சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. (80921)

## தோட்டக்காணி விற்பனைக்கு

நவற்கிரி அச்சுவேலி வீதியில், நவற்கிரி சந்தியில் இருந்து 200 யார் தொலைவில் வீதியில் இருந்து 25 யார் ஒழுங்கையுடன் 16 பரப்பு தோட்டக்காணி கிணற்றுபபங்குடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சிவபாத சுந்தரமூர்த்தி 55,சீனியர்லேன், கலட்டி அம்மன்கோயிலடி, யாழ்ப்பாணம். (80937)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி, கல்பேட் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர்வளவு). (80790)

## தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு:- தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80976)

## தவறிவிட்டது

கைதடி வடக்கு, நவபுரம் என்னும் இடத்தைச் சேர்ந்த கந்தன் செல்லன் என்பவரது விசேடஅடையாளஅட்டை (இல. 091047927) 24.11.2000 அன்று உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அக்கோயிலின நிர்வாகத்திடம் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (80954)

திருமதி சிவம் கௌசலன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 686740403X), விசேட அடையாள அட்டை (இல. 0905003883) என்பன மூத்தனார் கோயிலுக்கும், மருதடி விநாயகர் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மருதடிப் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் அல்லது மெடிலான் பாமசியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (80943)

செல்வி தர்மஜோதி நடராசா என்பவருடைய தேசிய அ.அ (இல.795824375V)வி.அ.அ (இல.0906026722), பாடசாலை அ.அ.(இல. 9138யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) என்பன பேர்ஸுடன் சுதுமலை அம்மன் கோயிலில் 26-11-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுதுமலை அம்மன் கோயில் நிர்வாகத்திடம் அல்லது தற்காலிக விலாசமான அ.கந்தையா, பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு தபாலில் சேர்க்கவும். (80956)

எழுதுமட்டுவாள் தெற்கு, எழுதுமட்டுவாள் என்ற முகவரியைச் சேர்ந்தவர்களான சிவபாக்கியம் வரதராசா என்பவரது தேசிய அடையாள அட்டை(இல.50641074v), விசேட அடையாள அட்டை (இல.091030387)யும் அதே இடத்தைச் சேர்ந்த ஐயாத்துரை வரதராசாவின் தேசிய அடையாளஅட்டை (இல.421974306v) என்பன பேர்ஸுடன் உரும்பிராய்ப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சி.மகாதேவன், நந்தாவில் ஒழுங்கை, தாவடி, கொக்குவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும் (80987)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

கொக்குவில்பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை அடுத்தமாதம 4ஆம் திகதி நல்லூர் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் என்று பிரதேச சபை செயலாளர் க.செல்வரத்தினம் தெரிவித்தார். அன்றைய தினம் கொக்குவில் பகுதிவாசிகள் தமது வளர்ப்பு நாய்களைக கட்டி வைக்கும் படியும் கேட்டுள்ளார். (ம-69)

# காணாமல் போன இளைஞர் காங்கேசன்துறை முகாமில்

தென்மராட்சி,நவ.29

காணாமல் போனதாக தேடப்பட்ட இளைஞர் ஒருவர் காங்கேசன் துறைத் தடுப்பு முகாமில் உள்ளார் என செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினர் பெற்றோருக்கு அறிவித்துள்ளனர். சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த தங்கவேலு ஜெயகாந்தன் (வயது14) எனும் இளைஞனே வல்வெட்டித்துறையில் தங்கியிருந்த வேளையில் கடந்த 12ஆம் திகதி முதல் காணாமல் போனதாக தேடப்பட்டவராவார். (ம-117)

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கா.மார்க்கண்டு

திதி: 2000-11-29

என் செல்வமே!
காலம் எல்லாம் தவமிருந்து
கடவுளிடம் வரம் வேண்டி
ஆசைக்கோர் ஆண்பிள்ளையாய்
அருமையாய்ப் பெற்றெடுத்து
நேசமுடன் வளர்த்தெடுத்து
குடும்பத்தை உயர்த்தவெண்ணி
பாசக்கோட்டையைத் தேன் கூடாய்
பக்குவமாய் கட்டி பாரினிலே கல்வி கரை சேர்ந்து
நல்ல அதிர்ஷ்டமென நாளும் மகிழ்ந்திருந்து
பொல்லாத காலமென சொல்லாமல் வந்ததுவே
இன்றைக்கு உன் அம்மா
தனி மரமாய் நிற்கிறேனே
ஆருமற்ற பாவியாய்
அந்தரத்தில் தவியாய்த் தவிக்கின்றேன்.

உன் ஆத்மா சாந்தி அடைய விநாயகரை வேண்டுகிறேன்.

உன்பிரிவால் துயருறும்
**அன்பு அம்மா.**

*'தேவபவனம்',*
*கைதடி நுணாவில்,*
*சாவகச்சேரி.*

(80948)

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**27.11.2000 (திங்கட்கிழமை) வரை கிடைத்த நிதி:-**

| | | ரூபா |
|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | 969,871 |
| 1. | சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் - நவாலி | 1,100 |
| 2. | அம்பாள் கடற்றொழில் கூ. சங்கம் - வெடியரசன் வீதி, காரைநகர் | 501 |
| 3. | நல்லையா கிளின்ரன், 548, ஆஸ்பத்திரி வீதி, யாழ். | 1,000 |
| 4. | அதிபர், ஆசிரியர்கள் யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதர் வித்தியாசாலை, யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை | 1,550 |
| 5. | ஓர் அரச திணைக்களம் - கோப்பாய் | 650 |
| 6. | மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யா/பிராந்திய ஊழியர்களின் பங்களிப்பு | 1,250 |
| 7. | மெதடிஸ்த கல்வி நிலையம் (Y.M.C.A) தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை | 1,000 |
| 8. | ஓர் அன்பர் - ஸ்ரீலங்கா ரெலிகொம் | 200 |
| 9. | ஓர் அன்பர் - ஸ்ரீலங்கா ரெலிகொம் | 200 |
| 10. | வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை | 6,200 |
| 11. | அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் - யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி | 3,000 |
| 12. | லொயலாஸ், 195, பிரதான வீதி, 4ஆம் குறுக்குத்தெருச் சந்தி, யாழ்ப்பாணம் | 3,000 |
| 13. | அமரர்கள் மயில்வாகனம் நாகன் நினைவாக நாயன்மார்கட்டு | 200 |
| | மொத்தம் | 989,722 |

# மானிப்பாய் சந்தையை நவீனமாக்க கோரிக்கை

வலி.தென்மேற்கு,நவ.29

மானிப்பாய்ப் பொதுச் சந்தையை நவீன சந்தையாக மாற்றி அமைப்பதற்குத் தேவையான நிதியை ஒதுக்கித் தருமாறு ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜேன்சன் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரி உள்ளனர்.

மேற்படி சந்தையை புனரமைப்புச் செய்து நவீன சந்தையாக மாற்ற 50 லட்சம்ரூபா நிதி தேவை என்றும்-

சுன்னாகம், திருநெல்வேலி போன்றதொரு நவீன சந்தையாக மானிப்பாய் சந்தையையும் மாற்ற வேண்டும் என்றும்-

அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் அன்ரன் ஜேன்சன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-185)

# நவில்கின்றோம் நன்றிகள் பல

23-11-2000 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்புத்தெய்வம்

## அருணாசலம் ஆறுமுகம்

(சமாதான நீதிவான், இளைப்பாறிய உப.அதிபர்)

அவர்களது அந்திமக் கிரியைகளில் கலந்து கொண்டு எங்கள் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் வசித்தும் துயரச்செய்தி கேட்டதும் ஓடோடி வந்து பங்கு கொண்டோருக்கும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி உப அதிபர், ஆசிரியர்கள், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், யா/கப்புது ஏகாம்பர வித்தியாசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், யாழ்ப்பாணம், பளை வீதிஅபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வீதிஅபிவிருத்த| அதிகாரசபை மாகாணப் பணிப்பாளர், அலுவலகப் பொறியியலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சாவகச்சேரி ப.நோ.கூ சங்கத் தலைவர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், தென்மராட்சி வர்த்தக சங்கத்தினர்கள், இலங்கைவங்கி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், யாழ்.பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், யாழ்.மின்னகம், யாழ்.மகாநதிசங்கமம் என்பவற்றின் உரிமையாளர்கள், ஊழியர்கள், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் தலைமையில் அஞ்சல் உரை நடத்தியோர், துண்டுப்பிரசுரம், பத்திரிகை, தபால்மூலம் அஞ்சலி செலுத்தியோர், பல்வேறு நாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபச்செய்தி அனுப்பியோர், மலர்வளையங்கள் சாத்தி மரியாதை புரிந்தோர், எல்லாவகைகளிலும் பல்வேறு உதவிகள் புரிந்த கப்புதூவாழ் பெருமக்கள், கொட்டகைப் பந்தல் அமைத்துதவிய கரணவாய் லிங்கம்ஸ் உரிமையாளர், ஊழியர்கள் எல்லோருக்கும் பிரயாண வசதியற்ற இந்நேரம் தங்கள் அன்பு வாஞ்சையால் திரளாகச் சமுகம் தந்து அஞ்சலி செலுத்தியமைக்காக எங்கள் உளம் கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.


நிரந்தர முகவரி:
**"ஜெயபதி"**
*தாமோதரம் வீதி,*
*சாவகச்சேரி.*

**- குடும்பத்தவர்.**

தற்காலிக முகவரி:
**"ஜெயமலரகம்"**
*கப்புதூ,*
*கரவெட்டி.* (c/14019)

தகவல்:
**ஆ.ஜெயபாலன்** (மகன்)
(சமாதான நீதிவான்)

# ஆறாம் மாத நினைவஞ்சலி



## மார்க்கண்டு பரமேஸ்வரன்

(அருள்மிகு ஸ்ரீ வராகி அம்பாள் ஆலய தர்மகர்த்தா)

மலர்வு 28-10-1946 — உதிர்வு 29-05-2000

எம் அன்புக்குரிய அப்பாவே! நீங்கள் பிரிந்து ஆறு திங்கள் ஆனதோ? ஆறாது துயரம் தீராது கண்ணீர். உங்கள் நலம் பேணாது கோயில் தொண்டே பெரிதென அதன் வளர்ச்சிக்காக உயிரைக் கொடுத்தீர்கள்! நீங்கள் செய்த தொண்டுபோதும என்று அம்பாள் தன்னுடன் அழைத்தாளே! உங்கள் கால் பதித்து நடந்த ஆலயம் இப்போது பாழடைந்து கிடக்கப் பார்க்கின்றோம். உங்கள் பிள்ளைகள் நாங்கள் வளரும்வரை ஏன் அப்பா காத்திராமல் போனீர்கள்? நீங்கள் விட்ட பணியை, உங்கள் இலட்சியங்களை நாங்கள் நிறைவேற்றுவோம். உங்கள் ஆசி வேண்டித் தினமும் மலர் வைத்து வணங்கி உங்களை நினைத்து வாழ்ந்திருப்போம்.

**மனைவி,**
**தாய், பிள்ளைகள்.**
நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி.

*'வெண்மதி',*
*ஆனைக்கோட்டை.* (80865)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமெரிக்க அதிபர் பதவித் தேர்தல்

# புளோரிடாவில் ஜோர்ஜ் புஷ் வென்றுள்ளதாக அறிவிப்பு

## அல்கோர் மேன்முறையீடு

மியாமி, நவ. 29

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலில் புளோரிடா மாகாணத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை அடுத்துக் குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜோர்ஜ். டபிள்யூ. புஷ் பதவியேற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அதே சமயம் புளோரிடா மாகாண முடிவுகளை எதிர்த்து ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோர் மேன்முறையீடு செய்துள்ளார்.

அல்கோரின் கோரிக்கைப் படி ஆள்கள் மூலம் மறு எண்ணிக்கை நடத்தப்பட்ட 4 கவுண்டிகளில் போவாட் கவுண்டியில் மட்டும் முழு வாக்குகளும் எண்ணப்பட்டு முடிவு வெளிவந்தது.

அல்கோரின் கோட்டை என்று கருதப்படும் பாம் பீச் உட்பட மற்றைய 3 கவுண்டிகளில் மறு எண்ணிக்கைக்கான காலக்கெடு ஞாயிறு மாலை 5 மணியுடன் முடிவடைந்ததாகக் கூறி அதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின் முடிவுகளை மட்டும் வைத்து புஷ் 537 அதிகப்படியான வாக்குகளால் வென்றதாக மாகாண அமைச்சர் கதரின் ஹரிஸ் அறிவித்தார்.

இதனை அடுத்துக் கிளின்ரன் நிர்வாகத்திடம் இருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் முகமாக ஆட்சி மாற்ற விவகாரங்களைக் கவனிக்கப் புஷ் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இதேவேளை, புளோரிடா மாகாணத்தில் அனைத்து வாக்குகளும் மீண்டும் எண்ணப்பட்டிருந்தால் தானே ஜனாதிபதியாகி இருக்கலாம் என்று தெரிவித்துள்ள அல்கோர் மாகாண அமைச்சரின் அறிவிப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளார்.

வாக்கு எண்ணிக்கை மற்றும் இறுதி முடிவு தொடர்பாக புஷ், அல்கோர் ஆகியோர் தரப்புகளில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட அமெரிக்க உச்ச நீதிமன்றம் விசாரணைகளை டிசெம்பர் முதலாம் திகதி நடத்த உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ-8-6)

### 51 பேர் பலி

பெய்ஜிங், நவ. 29

சீனாவின் வடகிழக்கு மங்கோலியா பகுதியில் நிலக்கரிச் சுரங்கத்தில் எரிவாயுக்குழாய் வெடித்ததில், பணியில் ஈடுபட்டிருந்த 51 தொழிலாளர்களும் உயிரிழந்தனர்.

ஹைல நகரில் மாநில அரசின் 'தயான்' என்ற நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் இறந்தவர்களில் 11 பேரினது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன மற்றைய சடலங்களை மீட்கும் பணிகள் நடைபெறுகின்றன.

### தாக்குதல் நிறுத்தம்

ஸ்ரீநகர், நவ. 29

புனித றம்ழான் நோன்பு தொடங்குவதையடுத்து இந்திய அரசு அறிவித்திருந்த காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நிறுத்தம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

எனினும் காஷ்மீர் மாநிலத்தில் ராணுவக் கண்காணிப்புப் பணிகள் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இதேசமயம், தீவிரவாதிகள் இந்தியப் படையினரையோ, ராணுவ நிலைகளையோ தாக்க முயற்சித்தால், அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடபிரிவுக் கட்டளைத் தளபதி எச். எம். கன்னா தெரிவித்துள்ளார்.

தற்போதைய தாக்குதல் நிறுத்தம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டால் றம்ழானின் பின்னரும் தாக்குதல் நிறுத்தம் தொடரும் என்று மாநில முதல்வர் பரூக் அப்துல்லா தொலைக்காட்சி உரையில் கூறியுள்ளார்.

### ஐ. நா. வான் பரப்புத் தடையை மீறி

## இந்தியாவுக்கு விமானம் மூலம் ஈராக் உபஅதிபர் சென்றார்!

பாக்தாத், நவ 29

ஐ. நாவின் தடையை மீறி ஈராக் துணை ஜனாதிபதி இந்தியாவுக்கு விமானம் மூலம் சென்றுள்ளார்.

குவைத்தை ஆக்கிரமித்ததற்காக 1990 ஆம் ஆண்டு முதல் ஈராக் மீது ஐ. நா. விமானப் பறப்புத் தடையை விதித்துள்ளது. அமெரிக்கா மற்றும் பிரிட்டன் விமானப் படைகள் இதனைக் கண்காணித்து வருகின்றன.

ஈராக்கிய துணை ஜனாதிபதி தாகாய் யாசிம். ரமிடான் இந்தத் தடையை மீறி 'ஈராக் எயார்லைன்ஸ்' விமானம் மூலம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு சென்றுள்ளார்.

ஈராக் துணைப் பிரதமர் தாரிக் ஆசிஸ் வளைகுடா நாடுகளுக்குச் சென்று வந்த பின்னர் ஈராக்கிலிருந்து விமானம் மூலம் வெளிநாடு செல்லும் முதலாவது உயர் பதவியாளர் ரமிடான் ஆவார்.

ஈராக் மீதான விமானப் பறப்புத் தடை அமெரிக்காவின் போலியான நடவடிக்கை என்றும் —

இது சட்ட அடிப்படையில் உருவானது அல்லவென்றும் ரமிடான் தெரிவித்துள்ளார்.

# வீரப்பன் - புலிகள் தொடர்பு பத்திரிகைகளின் கட்டுக் கதை

## இணையப் பேட்டியில் நெடுமாறன் சாடல்

கன்னட நடிகர் ராஜ்குமாரைச் சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பன் கடத்தியதற்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுவது பிராமணப் பத்திரிகைகளின் கட்டுக் கதை என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் சாடியுள்ளார்.

இணைய சேவையொன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ள அவரிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளும், அவர் அளித்த பதில்களும் பின்வருமாறு:

கேள்வி:— ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தில் விடுதலைப் புலிகளின் பங்களிப்பு உள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறதே?

பதில்:— பிராமணப் பத்திரிகைகளே இப்படிக் கூறுகின்றன. புலிகள் இலங்கையில் போராடுகின்றனர் அவர்களுக்கும் வீரப்பனுக்கும் என்ன தொடர்பு? அத்துடன் இந்த விடயத்தில் புலிகள் எப்படி உதவியிருக்க முடியும்? பிரபாகரனும், புலிகளும் இந்திய அரசியலில் தலையிடுவதில்லை என்பதில் தெளிவாக உள்ளனர். கட்சி, இன. மத பேதமற்ற இந்தியாவின் ஆதரவையே அவர்கள் விரும்புகின்றனர்.

கேள்வி:— தமிழ்நாடு உள்ளடங்கலாக அகண்ட தமிழீழம் குறித்து அவர் பேசவில்லையா?

பதில்:— ஒருபோதும் இல்லை. முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் அரசு தான் இத்தகைய குற்றச்சாட்டுக்களைப் புலிகளைத் தடைசெய்வதற்காக உருவாக்கியது. இந்தக் குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் அவர்களால் நிரூபிக்க முடியவில்லை. இருந்தும் இத்தகைய பொய்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

கேள்வி:— ராஜ்குமாரின் விடுதலைக்காக புதுடில்லியில் விடுதலைப் புலிகளுக்கு 26 கோடி ரூபா கொடுக்கப்பட்டதாக சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளாரே?

பதில்:— (பலத்த சிரிப்பு)

இவ்வாறு நெடுமாறன் அளித்த பேட்டியில் மேலும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு: தமிழ்நாட்டில் உள்ள எந்தப் பிராமணனாவது தான் தமிழன் என்று கூற மாட்டார். பாடசாலைகளில் தமிழ் மொழிமூலம் கற்பிக்கப்படுவதையும், தமிழ் உத்தியோக பூர்வ மொழியாவதையும், கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படுவதையும் அவர்கள் எதிர்க்கின்றனர், பிராமணப் பத்திரிகைகளான 'இந்து' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்றவை தமிழருக்கு எதிராகவே உள்ளன. ராஜ்குமார் அல்லாமல் பிராமணத் தலைவர் ஒருவரை வீரப்பன் கடத்தியிருந்தால் சோ மற்றும் சுப்பிரமணிய சுவாமி போன்றோரோ, 'இந்து' பத்திரிகையோ இப்படியான கருத்துக்களை தெரிவித்திருப்பார்களா? வீரப்பன், சோவைக் கடத்தியிருந்தால் அவரை மீட்க நெடுமாறனை தூது அனுப்ப வேண்டும் என்று 'இந்து' பத்திரிகைத் தலையங்கம் [illegible] யுள்ளார். (ஒ)

### ஒரு கோடி ரூபா கொடுத்து

## பெனாஸிரைப் பதவியகற்ற பின்லேடன் முயற்சித்தாராம்

இஸ்லாமாபாத், நவ. 29

பிரதமராகத் தான் பதவி வகித்த போது, தனது அரசைக் கவிழ்க்க இஸ்லாமியத் தீவிரவாதியான ஒசாமாபின்லேடன் இஸ்லாமிய அடிப்படை வாதிகள் சிலருக்கு ஒரு கோடி ரூபா கொடுத்ததாகப் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ கூறியுள்ளார்.

ரஷ்ய நாளிதழான 'இஸ்வெஸ்டியா'வுக்கு அவர் அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்துக்கு எதிரான கொள்கையில் தீவிரமாகத் தான் இருந்ததாலேயே 1989 இல் பின்லேடன் தனது ஆட்சியைக் கவிழ்க்க முயன்றதாகப் பெனாஸிர் பேட்டியில் கூறியுள்ளார்.

## 20 ஆம் ஆண்டு நினைவாக...

மண்மகிழ 05 – 06 – 1928



விண்மகிழ 29 – 11 – 1980

அமரர்

## கந்தையா செல்லத்துரை


(தலைவர், அரசாங்கப் பொதுச் சேவை தொழிலாளர் சங்கம், யாழ் கிளை)

பார்தனில் நாங்கள் மேன்மையுற
பண்புடை நெறிகள் புகட்டியதும்
ஆருயிர் தந்து எங்களுக்காய்
அனுதினம் உழைத்து வளர்த்ததுவும்
ஈர்பத்து ஆண்டுகள் போனதனால்
இதயங்கள் நினைக்க மறந்திடுமோ?
சீர்பெற வைத்த தலைவா! உமை
சேவித்து அஞ்சலி செய்திடுவோம்.

நினைவழியா நெஞ்சங்கள்
**மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

முத்திரைச் சந்தி,
நல்லூர், யாழ்ப்பாணம். (80998)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி இராசலிங்கம்

(ரிங்கர் - பூச்சி)

இம்மைக்குள் 24-06-1949 — மறுமைக்குள் 10-12-1999

அன்பின் திருவுருவே!
பாசத்தின் ஒளிவிளக்கே!
உங்கள் அன்பு முகம் காணாமல்
கண்மூடி இமைப்பதற்குள்
ஜோதியாய்க் கலந்தாயோ?
உங்கள் அரவணைப்பில் தவழ
மீண்டும் வருவீர்களா?

இன்று [29—11 - 2000] புதனன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

- குடும்பத்தினர்

பாடசாலை வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை. [80994]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நீக்கிலாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
(செட்டியார்)

சில்லாலையைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் நேற்று (28-11-2000) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-11-2000) புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குச் (புதியநேரம்) சில்லாலை புனித கதிரைமாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சில்லாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி மே. மேரியோசேப்பின்
(சகோதரி)

'ஆவளை',
சில்லாலை, பண்டத்தரிப்பு. (81014)

## செல்லத்துரை ஞானகுருபரன்

சண்டிலிப்பாய் ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாக கொண்ட செல்லத்துரை ஞானகுருபரன் 27 – 11 - 2000 திங்கட்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் செல்லத்துரை—காலஞ்சென்ற திருமதி செல்லத்துரை ஆகியோரின் அன்பு மகனும், ஜெகதாம்பாளின் அன்புக் கணவரும், சுதாகர், வஜீரா (சுவிஸ்), காலஞ்சென்ற சுதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கேமளாவின் (பிரான்ஸ்) அன்புச் சித்தப்பாவும், இராசமணி (கொழும்பு), சிவஞானம், திருஞானம், ஞானமணி (கொழும்பு), சிவமணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வரதராசா, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவபாதம், இராசலட்சுமி, பத்மராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவஞானம், திருஞானம்.
சகோதரர்கள்

ஐயனார் கோவிலடி,
சண்டிலிப்பாய். (80982)

## திருமதி E.K. சுப்பிரமணியம் லீலாவதி

தெல்லிப்பழை கிளப் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி E. K. சுப்பிரமணியம் லீலாவதி (U K.) 26-11-2000 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற E. K. சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கரிலிங்கம் - ஆதிலட்சுமி தம்பதிகளின் மகளும் பத்மநாதன் (B Sc., U K), பத்மாவதி, கமலாவதி, புனிதவதி, ஜெயவதி ஆகியோரின் சகோதரியும் ரமணன் (மின்சார பொறியியலாளர், ஆஸ்திரேலியா), துஷ்யந்தி (U.K), லட்சுமணன் (U K) ஆகியோரின் தாயாரும் சிவநாதன் (பொறியியலாளர், (U.K), ஜெயகௌரி, புனிதா, விமலா(தேவி, தவராஜேஸ்வரி, ஈஸ்வரன் அசோககுமாரன் ஆகியோரின் மாமியாரும் எள்ளுப்பிள்ளையின் பருமகளும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவநேசம் [வைத்திய கலாநிதி] ஆகியோரின் மைத்துனியும் செந்தூரன், சுபாஜினி, கீர்த்தன், சர்மிளா, விஜிதா, தனுஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-11-2000) லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. பரமேஸ்வரி

5 ஆவது ஒழுங்கை, உடுவில். [80988]

## சுப்பையா நல்லையா
(தபால் லிகிதர் சேவையில் உயர் பதவி,
தபால் தந்தித் திணைக்களம், கொழும்பு)

தம்பாலை அச்சுவேலியை வசிப்பிடமாகக் கொண்டவரும் நீர்வேலி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆகிய சுப்பையா நல்லையா (தபால் லிகிதர் சேவையில் உயர் பதவி, தபால் தந்தித் திணைக்களம், கொழும்பு), நேற்று முன்தினம் (27– 11– 2000) திங்கட்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் இரத்தினத்தின் அன்புக் கணவரும், சிவதாசன் (கனடா), சாந்தி (நீர்வேலி), ரவிதாசன் (லண்டன்), தேவதாசன் (வினி வீடியோ, வவுனியா), கிருதாசன் (நீர்வேலி), சுதாதாசன் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி (கந்தரோடை), ராஜேஸ்வரி (ஆஸ்ரேலியா), பரமேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும் பவானி (கொழும்பு), ரமணிதரன் (ரமணி, பொடி அமைப்பாளர், நீர்வேலி), சோதி (லண்டன்), சுதா (நீர்வேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வினிதா (கொழும்பு), நிலக்ஷன் (கொழும்பு), சசீவினி (வவுனியா), தனுக்சன் (வவுனியா), ரஜீனி (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30-11-2000) வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரமணி, கிருபா
(மருமகன்) (மகன்)

நீர்வேலி வடக்கு. (81015)

# அபராதம்

2000 ஆம் ஆண்டுக்கான வருமானவரிப் பத்திரம் இன்றி மோட்டார் கார் செலுத்திய குற்றத்துக்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரை 500 ரூபா அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ ஏகநாதன் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை நகரப்பகுதியில் வைத்து பருத்தித்துறை பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட கரவெட்டி மேற்கைச் சேர்ந்த காந்தி யோகேந்திரன் (வயது 35) இமையாணன் மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த மாணிக்கம் கனகரத்தினம் (வயது 40) ஆகிய இருவரும், கடந்த திங்கட்கிழமை காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் குறித்த குற்றத்துக்காக தலா 250 ரூபா வீதம் இருவருக்கும் 500 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது. (இ-109)

# கால்நடை வளர்ப்போருக்கான கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், நவ. 29

நவீன முறையில் கால்நடை வளர்த்தல் மற்றும் அவற்றுக்கான நோய்த் தடுப்பு முறைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவில் ஞானவீரசன சமூக நிலையத்தில் டாக்டர் எம், தங்கராசா தலைமையில் நடைபெறும்.

செயற்கைமுறைச் சினைப்படுத்தல் செய்த மாடுகளுக்குகர்ப்பப் பரிசோதனை, முன் அடைப்பானுக்கு தடுப்பூசி ஏற்றுதல், கோழிகளுக்கு பூச்சி மருந்து விநியோகித்தல் ஆகியனவும் இன்று சனசமூக நிலையத்தில் நடைபெறும். (ம-10)

★ ✶ ★

தாவடி விவசாய சம்மேளனமும் கிராமமுன்னேற்றச் சங்கமும் இணைந்து யாழ். மிருக வைத்தியசாலையின் அனுசரணையுடன் நடைபெறும் கால்நடைக் கருத்தரங்கும் வெளிக்கள விழாவும் நாளை வியாழக்கிழமை தாவடி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது.

டாக்டர் எம். தங்கராஜா தலைமையில் நடைபெறும் கருத்தரங்கைத் தொடர்ந்து பசுக்களுக்கான சினைப் பரிசோதனை. பசுக்களுக்கான கர்ப்பச் சிகிச்சை, பசு, ஆடுகளைச் சினைப்படுத்தல், கால்நடைகள், கோழி ஆகியவற்றுக்கான தடுப்பு மருந்து வழங்குதல் என்பனவும் இடம்பெறும். (ம-5)

# வெள்ளத்தால் மக்கள் வெளியேற்றம்

நெல்லியடி, நவ. 29

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால், தும்பளை லூர்த்து மாதா ஆலயத்துக்கு அருகில் உள்ள அகதிகள் முகாமுக்குள் மழை வெள்ளம் புகுந்துள்ளது.

வடமராட்சி கிழக்கிலிருந்து ஏற்கனவே இடம் பெயர்ந்திருந்த 86 குடும்பங்களைச் சேர்ந்த 400 பேருக்கு இப்பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன.

இந்தக் குடிசைகளுக்குள்ளேயே வெள்ளம் புகுந்துள்ளது.

வெள்ளம் காரணமாக முகாமிலிருந்து வெளியேறிய மக்கள் இலங்கை செஞ்சிலு [illegible] ளனர். (இ-109)

# மன்னார் மீனவர் பிரச்சினை குறித்து ஆராய விரைவில் மாநாடு

## டக்ளஸ் தலைமையில் கொழும்பில் நடக்கும்

கொழும்பு, நவ. 29

மன்னார் மாவட்டத்திலுள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முகமாக உயர்மட்ட மாநாடு ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விரைவில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் மீன்பிடித்துறை அமைச்சர், இராணுவம் மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள், மன்னார் மாவட்ட மீனவர் சமாஜப் பிரதிநிதிகள், மன்னார் அரசாங்க அதிபர், மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மீன் பிடிக்க அனுமதிக்கப்படும் தூரம், நேரம் இயந்திர வள்ளங்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதி, மீனவர் நிவாரணம், மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்கல் ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் —

பேசாலையில் ஐஸ் தொழிற்சாலை அமைத்தல், தகரத்தில் மீன் அடைத்தல், கடல் அரிப்பை கட்டுப்படுத்தல், மீனவர்களுக்குக் கடன் வழங்கல் போன்ற விடயங்கள் பற்றியும் —

இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த கால யுத்த வன்செயல்களினால் மன்னார் மாவட்டத்தில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனராகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ம-5)

# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

மாணவ குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பயிற்சிக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களைச் சுகாதார அமைச்சு கோரியுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும் என்றும் —

நாளை வெளிவரும் வர்த்தமானியில் இந்தப் போட்டிப் பரீட்சை தொடர்பான விவரங்கள் இடம்பெறும் என்றும் —

யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த வர்த்தமானி வைத்தியசாலை மற்றும் தபாலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3-139)

# புதிய தலைவர் நியமனம்

யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடைபெற்று மூன்று வருடங்களின் பின்னர் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியைச் (புளொட்) சேர்ந்த வேலு நவரத்தினம் என்பவரே புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் அண்மையில் நடைபெற்ற நாடாளு மன்றப் பொதுத்தேர்தலில் புளொட் கட்சி சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது. (உ-117)

# விபத்தில் காயம்

வல்லை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நீதிமன்ற எழுதுவினைஞர் ஒருவர் காயமடைந்தார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற எழுதுவினைஞரான அச்சுவேலிவடக்கைச் சேர்ந்த சி. சந்திரலிங்கம் (வயது 55) என்பவர் முகத்தில் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

(இ — 109)

# அனுமதி அட்டைகள்

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் கரவெட்டியில் இயங்கும் சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய அஞ்சல் அலுவலகங்களுக்கு வந்துள்ளன.

பரீட்சார்த்திகள் தத்தமது பிரிவு அஞ்சல் அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அஞ்சல் அதிபர்கள் அறிவித்துள்ளனர். (உ-117)

# இதய அஞ்சலி

எமது சகோதர ஊழியர்
செல்வி ச. கோவிகா அவர்களின்
அன்புத் தந்தை

## திரு. ஆறுமுகம் சண்முகநாதன்

அவர்கள் 27 - 11 - 2000 அன்று காலமானதையிட்டு அவரைப் பிரிந்த குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

நீதிக்கிளையினர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்,

(81012)

# கண்ணீர் அஞ்சலி

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க உபதலைவரும் காரைநகர் பிரஜைகள் குழுத் தலைவருமான

## திரு. க. கந்தையா

அவர்கள் 27-11-2000 திங்கட்கிழமை கொழும்பில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/கலாநிதி ஆ. தியாகராசா
மத்திய மகா வித்தியாலயம்,
காரைநகர்.

(சி/14026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவ நிபுணர்கள் கூட்டாக ஜனாதிபதிக்கு மகஜர்

# யாழ்.ஆஸ்பத்திரிக்கு மருந்து எடுத்துவர பாதுகாப்பு அமைச்சின் அனுமதி ஏன்?

## புரிந்து கொள்ள முடியாத விதிமுறை எனக் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ். போதனா வைத்தியசாலை பல் சத்திரசிகிச்சை நிபுணர்கள், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள ஆகியோருக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

கொழும்பில் இருந்து யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவையான மருந்துப் பொருள்களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெறும் விதிமுறையை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் -

கோரும் மகஜர் ஒன்றை யாழ். ஆஸ்பத்திரியில் பணிபுரியும் சிரேஷ்ட வைத்திய நிபுணர்களும், சத்திரசிகிச்சை நிபுணர்களும், வைத்திய ஆலோசகர்களும் சேர்ந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ்.ஆஸ்பத்திரியில் தொடரும் குறைகளைச் சுட்டிக்காட்டி எழுதியுள்ள இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த ஆஸ்பத்திரியில் வைத்திய நிபுணர்களுக்கும் சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கும், வைத்தியர்களுக்கும் தொடர்ந்து பற்றாக்குறை நிலவி வருகின்றது. உதாரணமாக சத்திர சிகிச்சைக்கான மயக்க மருந்து வழங்கும் பகுதி 1991 ஆம் ஆண்டு முதல் அதற்கான வைத்திய நிபுணத்துவ ஆலோசகர் எவரும் இல்லாத நிலையிலேயே இயங்கி வருகிறது.

இந்தப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு வைத்தியர்களை ஒரு வருடமோ அல்லது 6 மாதங்களோ யாழ்.ஆஸ்பத்திரியில் சுழற்சி முறையில் பணிபுரிய ஏற்பாடு செய்யவேண்டும்.

வைத்திய நிபுணர்கள் மற்றும் சத்திரசிகிச்சை நிபுணர்களையும் சுழற்சி முறையில் யாழ்.ஆஸ்பத்திரியில் கடமையாற்றச் செய்வதற்கு சுகாதாரத் திணைக்களம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கான பணிப்புரையை ஜனாதிபதியாகிய நீங்கள் சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கவேண்டும். இதன் மூலம் நிலவிவரும் நிபுணர்கள் பற்றாக்குறையை ஓரளவு தீர்க்க முடியும்.

வைத்தியர்களும் நிபுணர்களும் நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் யாழ்.ஆஸ்பத்திரியில் கடமையாற்றுவதற்குத் தேவையான ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

இதேவேளை -

யாழ்.ஆஸ்பத்திரிக்குத் தேவையான மருந்து வகைகளை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மருத்துவ விநியோகப் பிரிவால் விநியோகிக்கப்படும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை பெற்றுக் கொள்ளும் போதனா ஆஸ்பத்திரிகளில் எமது ஆஸ்பத்திரி மட்டும்தான் அவற்றைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டியுள்ளது.

இதே மருத்துவ விநியோகப் பிரிவில் இருந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு மருந்துகள் அனுப்பப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையில்லாத போது யாழ்.ஆஸ்பத்திரிக்கு மட்டும் இந்த விதிமுறை ஏன் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரிக்கு மட்டும் மருந்துகளை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற விதிமுறை எதற்கு?

மருந்துப் பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப பெறுவதற்கு இரண்டு முதல் மூன்று கிழமைகள் செல்கின்றன. இதனால் உரிய மருந்துகள் உரிய நேரத்தில் ஆஸ்பத்திரிக்குக் கிடைப்பதில்லை. இதன் காரணமாக நோயாளர்கள் பெரும் பாதிப்படைகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் பல தடவைகள் ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு சமயம் வலி நிவாரணத்துக்கான ஊசி மருந்துகளான மோபின், பெதிடீன் ஆகியவை யாழ்.ஆஸ்பத்திரியில் மூன்று மாத காலமாக இல்லாதிருந்தன.

அவற்றிற்கு மாற்றீடான மருந்துகளை தனியாரிடம் இருந்து கொள்வனவு செய்ய ஆஸ்பத்திரி நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. ஆனால் அதற்கும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டி இருந்தது. அதனால் அந்த மருந்துகள் வந்துசேர மூன்று வார கால தாமதம் ஏற்பட்டது.

இக்காலப்பகுதியில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நோயாளர்கள் பெரும் பாதிப்படைந்தனர்.

மருந்துகளை யாழ்.ஆஸ்பத்திரிக்கு வழங்குவதில் பாதுகாப்பும் முக்கிய அம்சமெனில் -

போதிய மருந்துப் பொருட்களை அனுப்பிவிட்டு, ஆஸ்பத்திரியின் அருகிலேயே உள்ள 512 ஆவது படையணி அதிகாரிகள் அடிக்கடி மருந்துகளின் இருப்பை ஆஸ்பத்திரிக் களஞ்சியத்தில் சோதனை செய்து கொள்ளலாமே.

எவ்வாறெனினும் மருந்துப் பொருள்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படாவிடில் மக்களுக்கு தக்க நேரத்தில் தக்க சிகிச்சையை அளிக்கும் ஒரு நிறுவனமாக யாழ்.ஆஸ்பத்திரி இயங்க முடியாது.

1996 ஆம் ஆண்டு இந்த ஆஸ்பத்திரியை மீண்டும் இயங்க வைப்பதற்கு சில ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இப்போது இந்த ஆஸ்பத்திரி உரியவாறு இயங்க முடியாத மிக மோசமான நிலைக்கு வந்துள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரி வைத்தியசாலையாக மட்டுமன்றி போதனா வைத்தியசாலை என்ற நிலையிலும் செயற்பட்டு வருகிறது. போர்ச் சூழலில் இந்த ஆஸ்பத்திரி உரிய முறையில் இயங்க வேண்டியது அவசியம்.

அதேசமயம் -

இந்த ஆஸ்பத்திரியில் தாதியர்களுக்கும் உப மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் கூட பற்றாக்குறை நிலவுகிறது. அவற்றையும் கூட விரைவில் நிவர்த்தி செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆஸ்பத்திரியை உரிய வகையில இயக்குவதற்கு ஆஸ்பத்திரி நிர்வாகம பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. இந்த நிலையிலேயே இந்த மகஜரை நாங்கள் எழுதுகின்றோம்.

இவ்வாறாக அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் யாழ்.ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சை நிபுணர்கள், வைத்திய நிபுணர்கள், சிரேஷ்ட வைத்திய ஆலோசகர்கள் 12 பேர் ஒப்பம இட்டுள்ளனர்.

மகஜரின் இறுதியில் யாழ்.ஆஸ்பத்திரியில் நிலவும் வைத்தியர்கள், நிபுணர்கள், தாதிகள் மற்றும் ஊழியர்களின் வெற்றிடங்கள் பற்றிய பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றின் விவரம் வருமாறு:-

★ வைத்திய நிபுணர்கள் - 02
★ சத்திர சிகிச்சை நிபுணர்கள்- 02
★ நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் - 01
★ மார்பு சத்திரசிகிச்சை நிபுணர் - 01
★ முறிவு நெரிவு சத்திர சிகிச்சை நிபுணர் - 01
★ நரம்பியல் வைத்தியர் - 01
★ கதிர்ச் சிகிச்சை வைத்தியர் - 01
★ ஆய்வுகூட வைத்திய நிபுணர்- 04
★ மயக்க மருந்து செலுத்தும் வைத்தியர் - 03
★ கண் சத்திர சிகிச்சை நிபுணர் - 01
★ பெண்ணியல் நோய் நிபுணர் - 01

(உ-ம)

## பகைமை....

(முகப்பாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தி தொடர்பாக 'பகைமை உணர்வுகளைப் புலிகள் கைவிட வேண்டும்' என்று தலைப்பிட்டு தாம் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சுமுகமான சூழ்நிலை மற்றும் நல்லெண்ணம் நிலவும் புறநிலை என்பவற்றில் மக்களின் நலன்களே முன்நிறுத்தப்பட வேண்டும் என்றே நாமும் விரும்புகின்றோம்.

குடாநாடு மற்றும் வன்னி உட்பட மக்களின் சுதந்திரமான தரை, கடல், ஆகாயம் மார்க்கப் போக்குவரத்துகளுக்கு இடையூறு இல்லாமல் இருப்பது, சுமுகமான நிலையை உருவாக்கும் நோக்குடன் செயற்படும் உள்ளூராட்சி அமைப்புகளின் செயற்பாடுகளுக்கான முட்டுக்கட்டைகளை நீக்குவது, ஜனநாயக அரசியல் சக்திகளின் செயற்பாடுகள் மீதுள்ள ஆயுத அச்சுறுத்தல்களை அகற்றுவது போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்படுவது அவசியமானதாகும்.

கூர்மையடைந்துள்ள பகைமை உணர்வுகள் மறைந்து போர்நிறுத்தம் உருவாகின்ற சூழ்நிலைக்காக அனைத்து வகையான ஆயுதப் பிரயோகங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வகையில் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி மக்களின் நலன்களுக்கான பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்கும் நோக்கில் ஈ.பி.டி.பி. போன்ற அரசியல் கட்சிகள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை எதிர் நிலையில் நின்று குழப்பும் கைங்கரியங்களை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

குறிப்பாக வடக்கு அபிவிருத்தி, மீள்குடியமர்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் விவகார அமைச்சின் மூலமாக மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்க முன்வருவதன் மூலமாக சுமுகமான சூழல் தோன்ற [illegible] முற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஏழாலை வசந்தபுரம்

**அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**

சகல தோஷங்களும் நீங்கி அம்பிகையின் திருவருள் பெறவும், சமாதானம் மிளிரவும் ஸ்ரீ நவரத்தின மணி மாலை ஜெபம்.

காலம் :- 01.12.2000 வெள்ளி தொடக்கம் 03.12.2000 ஞாயிறு வரை.

1ஆம் நாள :- சக்தி பூஜை பி.ப. 2.30

2ஆம் நாள :- அகண்டநாம பஜனை காலை 8மணி முதல் மாலை 5மணி வரை

(நிகழ்த்துபவர்கள்: ஆத்மஜோதி முத்தையா ஞாபகார்த்த குழுவினர்)

3ஆம் நாள் ஸ்ரீ நவரத்தின மணிமாலை ஜெபம். காலை 8.30 மணிமுதல் பி.ப. 2மணிவரை

அன்றையதினம் விசேடமாக **அன்னாபிஷேகம், கோமாதா பூஜை, மகேஸ்வரபூஜை** என்பன நடைபெறும்.

அம்பிகை அடியார்கள் அனைவரும் 3ஆம் நாள் நோன்பிருந்து தேசிக்காய் தீபமேற்றி ஸ்ரீ நவரத்தின மணிமாலை ஜெபம் செய்து அன்னையின் திருவருள் பெற்றுய்வார்களாக!

(C/14027) - தேவஸ்தானம்.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

இலங்கை அதிபர் சேவையில் தரம் ஒன்றிற்கு பதவி உயர்வு பெற்றுள்ள எமது அதிபர்

**திரு.அ.பேரம்பலம்**

அவர்கள் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று நலமுடன் பல்லாண்டு காலம் வாழ இறையாசி வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம், துணை ஆளணியினர்.

*யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.* (C/14024)



**நன்றி நவிலல்**

பருத்தித்துறை கலைவாணி நகைமாளிகை உரிமையாளர்

**அருட்பிரதாசன் முரளிதரன் (முரளி)**

அவர்கள் கார்த்திகை மாதம் (20-11-2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட மாணவ, மாணவியர்க்கும், விரிவுரையாளர்களுக்கும், கூட்டுறவுத் திணைக்கள அன்பர்களுக்கும், IIS கணனி நிறுவனத்தினருக்கும் பருத்தித்துறை வர்த்தகர்களுக்கும் முரளியின் நண்பர்களுக்கும் கொழும்பு, வவுனியா, வெளிநாடுகளில் இருந்து தந்தி, தொலைபேசி வாயிலாக அனுதாபம் தெரிவித்தோர்க்கும் உற்றார், உறவினர்களுக்கும் ஏனைய அன்பர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனைவி, தாய், தந்தை, சகோதரிகள் மாமன், மாமி, மைத்துனிமார், மைத்துனிகள்.

தகவல்:- **ஆ.பாலச்சந்திரன் (மாமா)** தும்பளை, பருத்தித்துறை. (C/14029)



**கண்ணீர் அஞ்சலி**

எமது திணைக்களத்தில் சிறப்பாகக் கடமையாற்றும் செல்வி ச.கோபிகா அவர்களின் அன்புத் தந்தையார்

**ஆறுமுகம் சண்முகநாதன்**

(முன்னாள் முகாமையாளர், மக்கள்வங்கி - ஊர்காவற்றுறை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வலயக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.**

(81008)



**மரண அறிவித்தல்**

**இராமலிங்கம் பொன்னையா**

**(இளைப்பாறிய ஓவசியர்)**

வட்டுவத்தை அல்வாயை பிறப்பிடமாகவும், சாத்திரியார் வளவு இமையாணன் உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் பொன்னையா 28-11-2000 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-11-2000) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எள்ளங்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- *பொ.இராமலிங்கமூர்த்தி* (மகன்) (இலங்கை மின்சாரசபை)

*சாத்திரியார் வளவு, இமையாணன், உடுப்பிட்டி.* (81005)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 16,599 புலிகள் இதுவரை களப்பலி

வவுனியா,நவ.29

விடுதலைப்புலிகளின் மண் மீட்புப் போராட்ட வரலாற்றில் புலிகள் தரப்பில் இதுவரை 16,599 பேர் உயிரிழந்துள்ளனர் என விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஒன்று தெரிவித்தது.

1982 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி முதன்முதலில் களப் பலியான புலிகளின் வீரர் லெப்டினன்ட் சங்கரும் பின்னர், கடந்த 20 ஆம் திகதிவரை களப்பலியான போராளிகளின் எண்ணிக்கையே இதுவாகும். உயிரிழந்தவர்களில் 13 ஆயிரத்து 192பேர் ஆண்கள். 3407பேர் பெண்கள்.

இவர்களில் 60 ஆண் தரைக் கரும்புலிகள், 18 பெண் தரைக் கரும்புலிகள், 98 ஆண் கடற்புலிகள், 37 பெண் கடற்புலிகள் என 213 கரும்புலிகள் உயிரிழந்துள்ளனர்.

ஆண் எல்லைப்படை வீரர்கள் 191 பேர், பெண் எல்லைப்படை வீரர்கள் 4 என ,195 எல்லைப்படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஈரோஸ் குழுவைச் சேர்ந்த 266 பேரும் தனிக்குழுக்களைச் சேர்ந்த பத்துப் பேரும் தமது போராட்டத்துக்காக உயிரிழந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளில் தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை விலாவாரியாகப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

ஆகாய கடல் வெளித் தாக்குதல் 604, மணலாற்றுத் தாக்குதல் 233, தவளைப் பாய்ச்சல் தாக்குதல் 460, கொக்குத் தொடுவாய்த் தாக்குதல் 175, இடிமுழக்கம் தாக்குதல் 181, சூரியகதிர் 438, ஓயாத அலைகள் I - 315, ஓயாத அலைகள் II - 403, ஓயாத அலைகள் III - 1336, சப்ஜெய I - 100, சப்ஜெய III - 133, பரந்தன் ஆனையிறவுத் தாக்குதல் 193, வவுணதீவுத் தாக்குதல் 103, கிளிநொச்சி - பரந்தன் ஊடறுத்துத் தாக்குதல் 300, ஜெயசிக்குறு 2116 பேர் உயிரிழந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை காலப் போராட்டத்தில் 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆகக் கூடுதலாக 2101 பேர் தமது தரப்பில் உயிரிழந்தனர் என்றும் -

இந்த வருடம் இதுவரை 1742 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் -

புலிகள் அந்தப் புள்ளிவிவரங்களில் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

1982 ஆம் ஆண்டு முதல் வருடரீதியாக உயிரிழந்த புலிகளின் எண்ணிக்கை வருமாறு:-

1982 -1, 1983 - 5, 1984 - 36, 1985 - 124, 1986 - 258, 1987 - 451, 1988 - 363, 1989 - 372, 1990 - 960, 1991 - 1613, 1992 - 788, 1993 - 925, 1994 -374, 1995- 1503, 1996 - 1376, 1997 - 2101, 1998 - 1789, 1999 - 1543. (உ-8)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள அவசர - முக்கியத்துவம் வாய்ந்த - பிரேரணையை அன்றைய தினம் விவாதத்துக்கு எடுக்க சபாநாயகர் அனுமதி அளித்திருப்பதாக ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

பிரேரணையை சமர்ப்பித்து தாம் நிகழ்த்தும் உரைக்கு அரசுத் தரப்பில் பதில் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பதில் அளித்து பேசுவார் என்றும் -

இந்த விவாதத்துக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.(உ)

## வெள்ளியும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுனிசெவ் அமைப்பு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது.

இந்தத் தடுப்பு மருந்து வழங்கப்படும் நாள்களில் ஆயுத மோதல்கள் இடம்பெறும் பிரதேசங்களில் மோதல் தவிர்ப்பை மேற்கொள்ள இந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருவது வழமை. (உ-8)

## அரியாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் மூன்று பங்கர்களை படையினர் தாக்கி அழித்தனா என்றும் இந்தத் தாக்குதலில் ஏழு விடுதலைப்புலிகள் உயிரிழந்தனர் என்றும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## லங்காமுடித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பமாகவிருந்த முதலாவது சேவையில் பயணிப்போருக்கான பயணச் சீட்டுக்களும் வழங்கப்பட்டிருந்தன.

இந்தச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக திடீரென நேற்றுக்காலை அறிவிக்கப்பட்டதால், இன்று பயணம் செய்வதற்கான பயணஏற்பாடுகளுடன் நேற்று யாழ்.ரயில் நிலையத்திற்கு வந்த பயணிகள் அனைவரும் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

## ஹொரவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களில் மோசமான நிலையில் இருந்த ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

பிரஸ்தாப பாதையை பொது மக்களும், படையினரும் பயன்படுத்துவது வழக்கம் என்றும் -

படையினரின் வாகனத்தை எதிர் பார்த்து இந்தக் குண்டு வைக்கப் பட்டிருக்கலாம் என்றும் - பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-8-10)

## அமெ., இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலெழுந்தவாரியாக வாசித்ததன் மூலமும் மற்றோர் கூறிய தகவல் மூலமும் அது சமாதானத்துக்கான அறிகுறியாகத் தெரிகிறது.

நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார் என்ற அவரின் அறிவிப்பை அமெரிக்கா வரவேற்கின்றது. அதன் அடிப்படையில் நோர்வேயின் உதவியுடன் இரு தரப்பும் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்பதே அமெரிக்காவின் விருப்பமாகும்.

பிரபாகரன் செய்தியில் குறிப்பிட்ட விடயங்கள் சரியானவை. அவற்றை ஏற்கனவே இலங்கை அரசுக்கு அமெரிக்கா உணர்த்தியிருக்கிறது.

இன்றைய சூழ்நிலையை சரியான முறையில் பயன்படுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்க ஐ.தே.கட்சியும் தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்றார்.

'நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயாரென பிரபா தெரிவித்திருப்பது இலங்கைத் தரப்பை விசனத்துக்கும் பலத்த நெருக்குதலுக்கும் உள்ளாக்கி இருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண இரு தரப்பும் முன்வரவேண்டும்' - என்று இந்திய வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

பிரபாவின் உரை சமாதான முயற்சிகளுக்கு நல்லதோர் அறிகுறி என்று பிரிட்டன் உட்பட சில மேற்கு நாடுகளின் இராஜதந்திரிகள் குறிப்பிட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜெயரத்தின கருத்து வெளியிடுகையில் -

புலிகள் பேச்சுக்கு வருவார்களா என்று நிலவிவந்த சந்தேகங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் பிரபாகரனின் செய்தி அமைந்துள்ளது.

நிபந்தனையில்லாமல் பேச்சுக்கு முன்வருவதான அவரது அழைப்புக்கு இலங்கை அரசு மதிப்புக் கொடுக்கும். உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க ஆராய்ந்து நடவடிக்கைகளை அரசு எடுக்கின்றது என்றார்.

ஐ.தே.க.பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு கருத்துத் தெரிவிக்கை 'யில் -

"நிபந்தனையற்ற பேச்சுக்கான பிரபாகரனின் அழைப்பிற்கு அரசு தலை சாய்க்க வேண்டும். உடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்." - என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ரெலோ அமைப்பின் தலைவர் அடைக்கலநாதன் செல்வம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் மனோ கணேசன் உட்படப் பல தமிழ்த் தலைவர்களும் தலைவர் பிரபாவின் உரையை வரவேற்றுக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேசமயம் ஜே.வி.பி.செயலாளர் விமல் வீரவன்ஸ, சிஹல உறுமயத் தலைவர் திலக் கருணாரத்ன போன்ற சிங்களக் கடும்போக்காளர்கள் பிரபாவின் உரையைக் கடுமையாகச் சாடிக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(உ-3-8-10)


விக்னா கல்வி நிறுவனம்
A/L 2001 DAY CLASS

| | | |
|---|---|---|
| H/C. | திரு.பத்மராஜா | 7.30 |
| TAM. | திரு.லிங்கம் | 8.30 |
| IQ. | திரு.அன்ரன் | 9.30 |
| Drama | திரு.மதி | 10.30 |
| Geo. | திரு.ஐங்கரன் | 11.30 |
| Hist | திரு.அன்ரன் | 12.30 |
| Chri | திரு.வசந்தன் | 1.30 |

ஆரம்பம்
01.12.2000
அளவையியல
திரு. சயந்தன்
பகுதி II
சனி, ஞயிறு 2.00 P.M.
(81001)

A/L 2001
DAY CLASS
கலைப் பிரிவு
ஆரம்பம்:
03.12.2000
காலை 9 மணி
(80980)
DMI யாழ்நகர்.

இன்றைய புதிய
வீடியோ CD வெளியீடு
ஜோதிகா, தபு
* சினேகிதியே
வெங்கடேஸ் நடித்த
* அழகே உன்னைக் காதலிக்கிறேன்
(81016)
விஷ்ணு வீடியோ
K.K.S.Road, கோண்டாவில்.

எமது புதிய
வீடியோ CD
வெளியீடு
* "மிலேனியம் 2000"
(திரைப்பட நட்சத்திரங்களின் இசை நிகழ்ச்சி)
ஒறிஜினல்
வீடியோ CD
வெளியீடுகள்
- கூண்டுக்கிளி
- அன்னக்கிளி
- பட்டினத்தார்
- செந்தூரப் பூவே
- பஹ்த அனுமான்
- நான் பேச நினைப்பதெல்லாம்
- சேரன் பாண்டியன்
- சிறையில் பூத்த சின்னமலர்
- சத்திரியன்
- மாநகர காவல்
- எங்க வீட்டு வேலன்
- கண்மணி
- அமரன்
- விக்னேஸ்வர்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/14028)

A/L பரீட்சை முடிவுகள்
A/L - 2000 பரீட்சை முடிவுகளை மாணவர்கள் எமது தலைமை நிறுவனத்தில் Internet மூலம் பார்வையிடலாம்.
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(C/14023)

JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRI LANKA
(Incorporated with IPSS) T.P: 3335
சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சித் திட்டம் 2000/2001
யாழ்.மாவட்டத்தில் கடந்த 21 வருடங்களாக பல்வேறு துறைகளில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்குச் சிறப்பாகப் பயிற்சியளித்துவரும் எமது நிறுவனத்தில் சிறுவர்களின் கணனி அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எமது 21 ஆண்டு நிறைவை முன்னிட்டு Children Program பயிற்சி நெறிக்கு 300 மாணவர்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளிப்பதற்கு தீர்மானித்துள்ளோம் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
*(இதற்கான அனுமதி முதல் விண்ணப்பிக்கும் மாணவர்களின் அடிப் படையில் மேற்கொள்ளப்படும்)*
இத் திட்டத்தின் கீழ் வழங்க உள்ள பயிற்சிநெறி
Children Program
- Introduction
- Power Point
- Word 2000
- Encyclopedia
- Excel 2000
- Games & Drawing
DURATION:- 3 Months
Note: இப்பிரிவில் 2000ஆம் ஆண்டு O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
பயிற்சி ஆரம்பம் 27.12.2000 (3.00 P.M)
Head Office:-
No. 52/2, Stanly Road,
Jaffna.
Branch:-
No.7, Palaly Road, Jaffna.
DIRECTOR.
(C/13995)

"நகரத்தில் ~ மீண்டும் சிகரத்தை நோக்கி..." BEACON
(வெலிங்டன் சந்தி அருகில்)
A/L 2001 - DAY CLASS

| | | |
|---|---|---|
| கணக்கீடு | : | திரு.பாலவாசன் |
| பொருளியல் | : | திரு.மோகன் |
| வர்த்தகம் | : | திரு.யசோதரன் |
| அளவையியல் | : | திரு.S.S.மனோகரன் |
| தமிழ் | : | பிரபல ஆசிரியர் |
| இந்து நாகரிகமும் இந்து சமயமும் | : | திரு.காரை.S.கெங்கா |
| கிறிஸ்தவம் | : | திருமதி சுனித்தா |
| நாடகமும் அரங்கியலும் | : | திரு.ஸ்ரீகந்தவேள் |
| புவியியல் | : | திரு.ஞானேஸ்வரன் |
| பொது உளச்சார்பு | : | திரு.தவசேகர் |
| ஆங்கிலம் | : | திரு.சுப்பிரமணியம் |

ஆரம்பம் 30.11.2k ⟹ 8.00 A.M.
(81013)

சயன்ஸ் அக்கடமி
நல்லூர் - யாழ்ப்பாணம்
A/L Teachers
கல்வியாண்டு - 2001
தரம் 4 முதல் O/L வரை 2001 இற்கான புதிய வகுப்புகள் யாவும் 09.12.2000 ஆரம்பமாகும்.
அனுமதிகள் யாவும் 09.12.2k முதல் 16.12.2k வரை
* A/L : 2000 திரு.பாலவாசனின் கணக்கீடு, சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
* தரம் : 4,5 ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.
(81017)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.